MISSION PRESS 1840

# சர்வவியாபி

SARVAVIABI

08-07-2018 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விளம்பி வருடம் ஆனி 24 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 112 பக்கம் - 12 | இதழ் 26


e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/2334360
ஆசிரியர்:அருள்தந்தை C. அந்தோனி ரோச்


## கிறிஸ்துவின் மகிமையை அவரின் சிலுவையிலிருந்து பிரிக்க இயலாது.

திருப்பொழிவு செய்யப்பட்டவரான கிறிஸ்துவின் மகிமையை, அவரின் சிலுவையிலிருந்து பிரிக்க இயலாது என்பதால், கிறிஸ்துவின் பாதையில் முட்டுக்கட்டையாக இருக்க வேண்டாம் என, கிறிஸ்துவர்களைக் கேட்டுக் கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ். புனிதர்கள் பேதுரு, பவுல் பெருவிழாவான ஜூன் 29, இவ்வெள்ளிக் கிழமை காலை 9.30 மணியளவில், வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில், 14 புதிய கர்தினால்கள், ஏனைய கர்தினால்கள் மற்றும் பேராயர்களுடன் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இப்பெருவிழாவின் நற்செய்தி வாசகத்தை மையப்படுத்தி மறையுரையாற்றினார். நீங்கள் என்னை, யார் எனச் சொல்கிறீர்கள் என, இயேசு தம் திருத்தூதர்களிடம் கேட்டபோது, சீமோன் பேதுரு, அவரிடம் நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன் (மத்.16:16) என்று விசுவாச அறிக்கையிட்டார் என்றுரைத்த திருத்தந்தை, கடவுளால் திருப்பொழிவு செய்யப்பட்டவரான கிறிஸ்து, தம் தந்தையின் அன்பையும், இரக்கத்தையும் உலகின் கடையெல்லைவரை தொடர்ந்து வழங்கிக்கொண்டே இருக்கிறார் என்றார். நம் நல்ல பெயர், நம் வசதிகள், நம் பதவி, போன்றவற்றை இழக்கவும், ஏன் மறைசாட்சிய வாழ்வையும்கூட சந்திக்க நேர்ந்தாலும், உலகில் ஒவ்வொருவருக்கும், வாழ்வின் எல்லா நிலைகளில் உள்ளவர்களுக்கும், இயேசுவின் இந்த இரக்கமுள்ள அன்பை வழங்க வேண்டும் என்று கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ். இயேசு தம் மரணம் பற்றி அறிவிக்கையில், அதை ஏற்க இயலாமல் பேதுரு இருந்தபோது, அவர் ஆண்டவரின் எதிரியாக மாறுகிறார் மற்றும், மெசியாவின் பாதைக்கு முட்டுக்கட்டையாக இருந்தார் என்றுரைத்த திருத்தந்தை, பேதுரு போன்று நாமும், தீயவனின் முணுமுணுப்பைக் கேட்கும் சோதனைக்கு உட்படும்போது, மறைப்பணிக்குத் தடைக் கற்களாக மாறுகிறோம் என்று மறையுரையாற்றினார்.



மனிதத் துன்பங்களைத் தொடும் தம்மோடு, நாமும் இணைய வேண்டுமென இயேசு கேட்கிறார் என்று கூறியத் திருத்தந்தை, கிறிஸ்துவின் மகிமையை அவரின் சிலுவையிலிருந்து பிரிக்க இயலாது என்று கூறினார். இத்திருப்பலியில் பாலியம் என்ற கழுத்துப் பட்டைகளை ஆசீர்வதித்த திருத்தந்தை, திருப்பலியின் இறுதியில், புதிய பேராயர்களிடம் அவற்றைக் கொடுத்தார். கடந்த ஆண்டு ஜூன் முதல், இவ்வாண்டு ஜூன் வரை, இந்தியா உட்பட, உலகின் பல்வேறு நாடுகளில், முப்பது உயர்மறைமாவட்டங்களுக்கு பேராயர்களை நியமித்துள்ளார் திருத்தந்தை. பாலியம் என்பது, முக்கிய திருவழிபாடுகளில் உயர்மறைமாவட்ட பேராயர்கள் கழுத்தில் அணியும் கழுத்தப்பட்டையாகும்.இத்திருப்பலியில், பொலிவிய அரசுத் தலைவர், மெக்சிகோ, பாகிஸ்தான், ஈராக், மடகாஸ்கர் போன்ற நாடுகளின் முக்கிய அரசு பிரதிநிதிகள் கலந்துகொண்டு, திருத்தந்தையின் ஆசீரைப் பெற்றனர். உரோம் நகரில் மறைசாட்சிகளாகக் கொல்லப்பட்ட திருத்தூதர்கள் பேதுரு மற்றும் பவுல், உரோம் நகரின் பாதுகாவலர்கள் ஆவார்கள். இந்நாள், உரோம் மாநகருக்கு அரசு விடுமுறையாகும். ●

## கிறிஸ்தவர்கள் இயேசுவின் தனித்துவம் பற்றி உறுதி

புனிதர்கள் பேதுரு, பவுல் பெருவிழா திருப்பலியை நிறைவு செய்த பின்னர், பகல் 12 மணிக்கு வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான திருப்பயணிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு மூவேளை செப உரையும் வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ். தான் யார் என்று மக்களும், திருத்தூதர்களும் நினைப்பது பற்றி திருத்தூதர்களிடம் இயேசு கேட்ட கேள்விகளை மையப்படுத்தி மூவேளை செப உரையாற்றிய திருத்தந்தை, “நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்” என்ற உண்மையை, கடவுளின் அருளால், பேதுருவும், அவரோடு சேர்ந்து எல்லாக் காலத்திலும் வாழ்கின்ற திருஅவையும் சொல்கின்றது என்றார்.

நீதி மற்றும் அன்பின் மாபெரும் இறைவாக்கினர், வாழ்வின் ஞானமுள்ள போதகர், புரட்சியாளர், கடவுளின் கனவுகளைக் காண்பவர் போன்ற பல்வேறு வழிகளில், உலகம், இயேசுவை, நூற்றாண்டுகளாக விளக்கியுள்ளது. ஆனால் இயேசுவின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் பேதுருவின் விசுவாச அறிக்கை, இன்றும் கிறிஸ்தவர்களில் நிலைத்து நிற்கிறது என்று கூறினார் திருத்தந்தை. இயேசு, கடவுளின் மகன், அவரின் இறைத்தந்தை என்றென்றும் வாழ்வதுபோன்று, அவரும் வாழ்கிறார். இந்த உண்மை, இயேசுவின் பேருண்மைக்குத் தங்களைத் திறந்து வைத்திருப்பவர்களின் இதயங்களில் சுடர்விடுகின்றது என்றும் திருத்தந்தை கூறினார்.

மேலும், “உன் பெயர் பேதுரு, இந்தப் பாறையின்மேல் என் திருஅவையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா (மத்.16:18)” என்று, இயேசு பேதுருவிடம் கூறிய வேளையில் “திருஅவை” என்ற சொல்லை இயேசு முதன்முறையாகப் பயன்படுத்தினார் என்றும், அவர் திருஅவை என்று கூறி, அதன் மீதுள்ள தம் அன்பை வெளிப்படுத்தினார் என்றும் திருத்தந்தை கூறினார். இயேசுவின் புதிய உடன்படிக்கை சமூகம், அவரின் மனுவுரு மற்றும் மோசே சட்டத்தின்கீழ் இல்லாமல்,அவரில் விசுவாசம் வைப்பதை அடிப்படையாகக் கொண்டது என்றும் கூறியத் திருத்தந்தை, திருஅவைக்காகச் செபிக்குமாறு கேட்டுக்கொண்டார். உரோமை மற்றும் உலகமனைத்திருலுமிருக்கின்ற திருஅவை அங்கத்தினர்கள் அனைவரும், நற்செய்திக்கு என்றென்றும் விசுவாசமாக வாழ்வதற்கு, திருத்தூதர்களின் அரசியாம் அன்னை மரியின் பரிந்துரையை இறைஞ்சி, இவ்வுரையை நிறைவு செய்தார், திருத்தந்தை பிரான்சிஸ். மேலும், மூவேளை செப உரையின் இறுதியில், புதிய கர்தினால்களுடன் திருப்பலி நிறைவேற்றியதையும், பல்வேறு நாடுகளில் கடந்த ஆண்டில் நியமிக்கப்பட்ட புதிய பேராயர்களுக்கு பாலியங்களை ஆசீர்வதித்ததையும் கூறி, அவர்கள் நற்செய்திக்கும் திருஅவைக்கும் ஆர்வமுடனும், மனத்தாராளத்துடனும் பணியாற்றுவதற்குச் செபிக்குமாறு கேட்டுக்கொண்டார் திருத்தந்தை.

கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும் தந்தையின் பிரதிநிதிகள் குழு, உரோம் நகருக்கு வருகை தந்து, புனிதர்கள் பேதுரு, பவுல் பெருவிழா திருப்பலியில் கலந்துகொண்டதற்கு நன்றியும் தெரிவித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.●

ஆசிரியர் பேனா...

# நமது அரசமைப்புச் சட்டம் பற்றி தெரிந்திருப்பது அவசியம்

**அ**ண்மையில், 11-6-2018 அன்று, நமது இந்திய ஆயர் பேரவையின் கல்வி மற்றும் கலாச்சாரத்துறையின் சார்பில், அரசமைப்பு பற்றிய விழிப்புணர்வு வழங்கும் வகையில் கல்வி நிறுவனங்களுக்கான ஒரு மாதிரி அலகு (Module) வெளியிட்டுள்ளதாக UCAN செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது. நமது அரசமைப்புச் சட்டத்தின் வளமையும், அது நமக்கு வழங்கும் கடமைகள் உரிமை களையும் மாணவர்களும் மற்றவர்களும் தெரிந்து கொள்ளும் நோக்கில் இது அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

**நடுவண் அரசின்** அணுகுமுறைகளும், மதச்சார்பு செயல்பாடுகளும், முன்னேற்ற முன்னெடுப்புகளும் நாட்டிலும் சமூகங்களிலும் பல சூழல் மாற்றங்களை தோற்றுவிப்பதை அன்றாடம் செய்தி தாள்களில் வாசிக்கிறோம். சிறுபான்மையினர் தாக்கப்படுவதும், பெரும்பான்மையினர் தங்கள் கருத்துருவாக்கங்களையும் மத நம்பிக்கைகளையும் திணிப்பதும் அச்சுறுத்துவதும் அன்றாட செய்திகளாக இருக்கின்றன.ஒவ்வொரு இந்தியனின் தனி மனித, சமூக, சமய உரிமைகளைக் காப்பது நமது அரசமைப்புச் சட்டம். இச்சட்டத்திலும் மாற்றம் கொண்டுவரப்படலாம் என்று கடந்த டிசம்பரில் மத்திய அமைச்சர் ஒருவர் பெங்களூரில் பேசியது சமூக சமய, அரசியல் தளங்களில் சலசலப்பை உருவாக்கியது.

**மதச்சுதந்திரம், பேச்சுரிமை ஆகியன** அவ்வப்பொழுது எழும் சர்ச்சைகள் மற்றும் வன்முறைகளாலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பொருளாதார வளர்ச்சி மட்டுமே அமைதியையும், இணக்கத்தையும், பன்மையில் ஒருமை காணும் நம் ஜனநாயக நாட்டில் நிலைநாட்ட இயலாது. சாமானிய மக்களின் சமய சமூக கலாச்சார உரிமைகளும், பேச்சுரிமையும் கருத்துரிமையும் காக்கப்படும்போது ஒருங்கிணைந்த முன்னேற்றம் காண இயலும்.

**இந்நிலையில் ஒருதலைச்சார்பு நோக்குடன்** செயல்படும் அரசுகள் மற்றும் அரசியல் கட்சிகளின் சார்பு இன்றி, சமூக நோக்குடன் நாம் நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் தரும் உரிமைகளையும் கடமைகளையும் தெரிந்து கொள் வது அவசியம் என நமது இந்திய ஆயர் பேரவை கணித் திருக்கிறது. இதன்படி, கல்வி நிறுவனங்கள், பயிற்சி மையங்கள், சபைகளின் தலைமை இல்லங்கள் ஆகியனவற்றில் இம்முயற்சிகள் முன்னெடுப்பது நல்லது. எந்த ஒரு கட்சியையோ, குழுவையோ, மதத்தினையோ குற்றம் சொல்வதற்காக அல்ல, மாறாக நமது உரிமை களையும் கடமைகளையும் தெரிந்து கொண்டு, நிகழும் சம்பவங்களில் முறையான நமது பங்களிப்பை வழங்கவும் நம்மை சட்ட ரீதியாக பாதுகாத்துக் கொள்ளவும் இம்முயற்சி மேற் கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு சபையும், நிறுவனமும், தொண்டு நிறுவனமும் தத்தமது ஆன்மீகத்தையும் பணிக் கூறுகளையும் அடிப்படைச் சட்டமாக கொண்டு பணி புரிகிறது. திருச்சபை சட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ள இந்த அடிப்படைச் சட்டங்கள் அந்தந்த நாட்டின் சட்டங்களுக்கும் நடைமுறைகளுக்கும் மதிப்பும் முன்னுரிமையும் தரச் சொல்கிறது. எனவே, அரசு துறை சார்ந்த சார்புநிலை பணி முயற்சிகளில் கல்வி நிறுவனங்களும், தொண்டு நிறுவனங்களும் முறையான அரசு உத்தரவுடன் பதிவு செய்து செயல்படுகிறதென நாம் அறிவோம். ஆண்டுக்கொருமுறை தணிக்கை செய்யப்பட்ட கணக்கு வழக்குகள் முறையாக பதிவு செய்யப்படுகின்றன. சமூகப் பணி, வெளிப்படைத் தன்மை, சட்டத்தை அனுசரிக்கும் உத்தரவாதம், கண்ணியம், சமுதாய கடமை ஆகியன பின்பற்றப்படுகின்றன. பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களும் அமைப்புகளும் முறையான அமர்வுகள், பொது அமர்வுகள், பணிப் பகிர்வுகள் ஆகியவற்றைக் கடைபிடிக்கின்றன, பதிவு செய்கின்றன. முறையான வரி செலுத்துதல், சட்டநுணக்கங்களை செயல்படுத்துதல் ஆகியனவற்றில் கவனம் செலுத்தப்படுகின்றது. இவற்றை திறம்பட நிறைவேற்ற அரசமைப்புச் சட்டம் பற்றிய விழிப்புணர்வு தேவை. தவறும் பட்சத்தில் தேவையற்ற குழப்பங்கள், சட்ட சிக்கல்கள், வழக்குகள், பொருள் விரயங்களைச் சந்திக்க நேரிடுகிறது.

**நமது இந்திய அரசு ஜனநாயக** கோட்பாடுகளைப் பின்பற்றும் அரசு; நாட்டின் இறையாண்மை முக்கியத்துவம் பெறுகிறது. இந்த தேசம் இதன் வளங்கள், கல்வி கலாச்சார சமூக சமய முன்னேற்றங்கள் போற்றப்பட வேண்டும். வெளிப்படைத் தன்மை, பொறுப்பு, பங்கேற்பு, செயலாக்கம், சட்ட வரைவுகள், சட்ட செயல்பாடுகள் அனைத்தும் தேசிய இறை யாண்மை மதிப்பீடுகள். அவை இறையரசின் மதிப்பீடுகளும் ஆகும். அரசமைப்புச் சட்ட மதிப்பீடுகளை மதிக்க இந்நாட்டின் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் கடமை உண்டு. இதில் சமயம், சமூகம், இன வேறுபாடுகள் இல்லை. பன்மையில் ஒருமை, இணக்கம், அமைதி, சுதந்திரம் ஆகியன நமது இந்திய அடிப்படைச் சட்டத்தின் கருப்பொருள் ஆகும். சமூகம், சமயம், மொழி, இனத்தால் வெவ்வேறாக இருந்தாலும் ஒருமைப்பாடும், கண்ணியமும், ஏற்பும், மதிப்பும் போற்றப்பட வேண்டும். இயேசு தாம் வாழ்ந்த காலத்தில் இதை எப்பொழுதும் கடை பிடித்து வந்தார். வரி தண்டும் மத்தேயுவை தேர்ந்தெடுத்தது, நல்ல சமாரியரை போற்றியது, கானானேயை பெண்ணின் நம்பிக்கையை மதித்தது ஆகியவற்றை மேற்கோள் காட்டலாம்.

**கல்வி நிறுவனங்களிலும்** பயிற்சி இல்லங்களிலும் தற்போது நிலவும் போதனை முயற்சிகளில், நாட்டின் அடிப்படைச்சட்ட விழிப்புணர்வு, பிறமதங்களின் நன்னெறிக் கோட்பாடுகள், சமூக நலன்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியனவற்றையும் இணைத்துக்கொள்வது இளம் உள்ளங்களில் இணக்கமானநிலையை உருவாக்கும். அதற்கு, நமது அரசமைப்புச் சட்டம் பற்றி அறிந்திருப்பது அவசியம். ●




ஆண்டின் பொதுக்காலம் 15ஆம் ஞாயிறு **(15-07-2018)** **ஆமோ.7:12-15 எபே.1:3-14 மாற்கு 6:7-13.**

# “அனுப்பப்படுவதற்காகவே அழைக்கப்படுகிறோம்”

**அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்**
**உதவி பங்குத்தந்தை, பேராலயம், புதுவை.**



“அழைக்கும் இறைவன் குரல் கேட்போம்
அவர் அழைப்பினை ஏற்றுபின்தொடர்வோம்.
எரியும் புதரில் மோயிசனை வீசும் காற்றில் எலியாசை
இடியின் ஒலியில் சின்னப்பரை இறைவன் அழைத்து வாவென்றுரைத்தார்”.

இறையேசுவில் பிரியமானவர்களே! நாம் திருப்பலியில் பாடுகின்ற இந்த பாடலுக்கு ஏற்ப, அன்றுமுதல் இன்று வரை இறைவன் தன் பணிக்கென மக்களை அழைத்துக் கொண்டுதான் இருக்கிறார். அவ்வாறு இறைவன் அழைப்பது, மீண்டும் அவர்களை தன் பணியை செய்ய அனுப்பப்படுவற்காகவே. ஒரு நாட்டைப் பாதுகாக்கின்ற பணிக்காக தேர்ந்தெடுக்கப் படுகிற இராணுவ வீரர்களை தேர்ந் தெடுத்து, அவர்களுக்கு பயிற்சியளித்து, வலிமைபடுத்தி பின் அவர்களை நாட்டின் எல்லைபாது காப்பிற்காக அனுப்புவதைப் போன்று இறைமகன் இயேசு இன்றைய நற்செய்தியில் தன் பணிக்காக தான் அழைத்த அப்போஸ் தலர்களை, ஆற்றல் படுத்தி, அதிகாரம் கொடுத்து அவர்களை அனுப்புகிறார்.

இயேசு அப்போஸ்தலர்களை இருவர் இருவராக அனுப்புகிறார். ஏனென்று சிந்தித்து பார்க்கிறபோது நிறைய காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது, இருவர் இணைந்து செல் கிறபோது பணியில் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருப்பர், பணியும் வலுவுள்ளதாக அமையும், கடினமான சூழலில் ஒருவர் துவண்டு விடுகிறபோது மற்றவர் அவரை தாங்கி பிடிக்க கூடும். ஆங்கில வாக்கியம் ஒன்று கூறுவார்கள் “For the success of any operation there should be proper co-operation”. மேலும், ஆண்டவர் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது நாம் தனித் தீவாக செயல்பட வேண்டும் என்பது அல்ல, மாறாக பிறரோடு இணைந்து செயல்பட வேண்டுமென்று தான். இரண்டா வது யூத சமுதாயத்தில் ஒரு செய்தி யானது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென் றால் அதற்கு குறைந்தது இரண்டு சாட்சி யங்கள் இருக்க வேண்டும். நாம் தானி யேல் புத்தகத்தில் பார்க்கிறோம், சூசன்னா வுக்கு எதிராக இரண்டு முதியவர்கள் பொய்ச்சாட்சி கூறுகிறார்கள் (தானியேல் இணைப்பு 2). 1அரசர்கள் 21 ம் அதிகாரத் தில் இரண்டு இழி மனிதர்கள் நாபோத் துக்கு எதிராக பொய்சாட்சி கூறுவதைப் பார்க்கிறோம். எனவே தனது நற்செய்தி முறையானதாக மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டு மென்று இயேசு இருவர் இருவராக அனுப்பு கிறார். மூன்றாவதாக, இருவர் இணைந்து இயேசுவின் நற்செய்தியை அறிவிக்க செல்கிறபோது, ஒருவர் தவறாகவோ அல்லது திரித்தோ அறிவித்தால் மற்றொருவர் அவரை திருத்த முடியும்.

இவ்வாறு அனுப்பப்படுகிறவர்கள் எவற்றை எடுத்துச்செல்ல வேண்டும்? எவற்றை எடுத்துச்செல்லக் கூடாது? என்று பார்க்கிற போது அவர்கள் இயேசுவின் நற்செய்தி பணிக்குத் அத்தியாவசிய மானவைகளை மட்டுமே எடுத்துச்செல்ல வேண்டும். இயேசு பயணத்திற்கு கைதடியும், காலுக்கு மிதியடியும் மற்றும் ஒரு அங்கியும் எடுத்துக்கொள்ளலாம் என்று கூறுகிறார். ஏனெனில் இவையெல்லாம் அடிப்படை தேவைகள். நற்செய்தி அறிவிக்க அனுப்பப்படுகிறவர் ஓர் ஆயரைப்போல இருக்க வேண்டும். ஏனெனில் ஆயர்கள் தங்கள் மந்தை களை மேய்க்கிற போது ஒரே இடத்தில் நிலையாக தங்கிவிடுவது கிடையாது மாறாக அவர்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்துகொண்டே இருப்பார்கள் எனவே அவர்கள் தங்களோடு பல்வேறு பொருட் களை தூக்கிக்கொண்டு செல்வது கிடையாது, அவ்வாறு எடுத்துச்சென்றால் அவர்கள் எளிதாக தங்கள் மேய்ப்புப் பணியை செய்ய இயலாது. ஆனால் அந்த மேய்ப்புப் பணிக்கு அத்தியவசியமாக இருக்கிற கைத்தடியையும், மிதியடியை யும், வெயில், மழை மற்றும் குளிரிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள ஓர் அங்கி யையும் அவர்கள் எடுத்து கொள்ளலாம். எனவேதான் இயேசு இந்த பொருட்களை எடுத்துச்செல்ல லாம் என்று கூறுகிறார். உணவைப் பற்றியோ, பையைப்பற்றியோ அல்லது செப்புக்காசு முதலியவைப் பற்றியோ கவலைப்பட வேண்டாம். ஏனென்றால் இவை அத்தியா வசிய மற்றவை. மேலுமாக கடவுளின் பணியாளர் கள் கடவுளுடைய பராமரிப்பில் நம்பிக்கை வைத்து செல்ல வேண்டுமென்று இயேசு கூறுகிறார். 1அரசர்கள் 17 ல் கடவுளின் பணியைச் செய்த எலியாவுக்கு காகம் மூலம் இறைவன் உணவு கொடுக்கிறார். 2 அரசர்கள் 4 ல் கடவுளின் பணியாள ரான எலிசாவுக்கு கடவுள் சாரிபாத்தின் கைம்பெண் மூலமாக உணவு கொடுக் கிறார். புதிய ஏற்பாட்டிலும் புனித பவுலடியார் தான் நற்செய்தி அறிவிக்க சென்ற இடமெல்லாம் பிரிஸ்கா, பிரிசில்லா, அக்குயிலா, கொரிந்து நகர சோலே, எவுதியா, சின்டிக்கே போன்ற பல்வேறு மனிதர்கள் மூலமாக கடவுளின் உடனிருப்பை உணர்கிறார்.

அனுப்பப்படுகிறவர்கள் எதிர்ப்புகளை சந்திக்க நேரிடும். இந்த பணியானது இறைவனுடைய பணியாகவே இருப்பினும் கண்டிப்பாக இதில் எதிர்ப் புகளும் இருக்கும். முதல் வாசகத்தில் ஆமோஸ் இறை வாக்கினர் பெத்தேலில் இறைவாக்கு உரைக்கக் கூடாது என்று அமட்சியா எதிர்ப்பு தெரிவிக்கிறார். அதற்கு ஆமோஸ் பதிலாக, “நான் இறைவாக்கினன் இல்லை, இறைவாக்கினர் குழுவில் உறுப்பினனும் இல்லை, நான் ஆடு மாடு மேய்ப்பவன், காட்டு அத்திமரத் தோட்டக்காரன். ஆடுகள் ஓட்டிக் கொண்டுபோன என்னை ஆண்டவர் தேர்ந்தெடுத்து, ‘என் மக்களாகிய இஸ்ராயேலிடம் சென்று, இறைவாக்கு உரைத்திடு, என்று அனுப்பினார்” என்று கூறுகிறார். இப்படி இறைவாக்கினரின் பணிக்கு எதிராக இருந்த அந்த அமட்சியாவின் முடிவு எப்படி இருக்கும் என்பதை இதே 7ம் அதிகாரம் 17ல் வாசிக்கிறோம். ஆமோஸ் அமட்சியாவைப் பார்த்து, ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார், “உன் மனைவி நகரில் விலைமகளாய் இருப்பாள், உன் புதல்வர் புதல்வியர் வாளால் மடிவர், உன் நிலபுலம் பங்கு போட்டுக்கொள்ளப்படும். நீயோ புனிதமற்ற நாட்டிலே மாண்டு போவாய்”. நற்செய்தி யிலும் அனுப்பப்பட்டவர்கள் எதிர்ப்புகளை சந்திக்கிறார்கள். ஏற்றுக்கொள்ளாத வர்களும், செவிசாய்க்காதவர்களும் இருக்கிறார்கள். இயேசு “உங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இருக்கிறபோது, நீங்கள் உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை அவர்களுக்கு எதிராக உதறி விடுங்கள்” என்கிறார். அவர்களோடு உறவாட வேண்டாம் என்கிறார். இறைவார்த் தையை ஏற்றுக்கொள்பவரோடு தங்குங்கள், அவர்களோடு உறவாடுங்கள் என்கிறார். அங்கே இறைவார்த்தை உறவுகள் உதிக்கின்றன. இறைவார்த்தை இல்லா விடில் அங்கே உறவு இல்லை மாறாக எதிர்ப்புதான் உண்டு.

இன்றைய காலகட்டத்திலே அனுப்பப் பட்டவர்களாகிய கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்துவின் நற்செய்திக்கும் பல்வேறு எதிர்ப்புகள் இருப்பதை நாம் தினம் தினம் செய்திதாள்களில் வாசிக்கிறோம். இத்தகைய எதிர்ப்புகளைப் பற்றி நாம் கவலைபட வேண்டியதில்லை, கலங்க வேண்டியதுமில்லை. ஏனெனில் இது நமது வேலையோ, நமது பணியோ அல்ல மாறாக கடவுளின் பணி, இயேசு நமக்கு விட்டுச் சென்ற அன்பின் நற்செய்தி பணி. அவர் செய்யச் சொன்னார், நாம் செய்கிறோம். எனவே கடவுளின் பணியை நாம் செய்கிற போது அதில் வரும் தடைகளை, எதிர்ப்பு களை அவரே பார்த்துக்கொள்வார். புனித அன்னை தெரசா தான் இறைவனால் அழைக்கப்பட்டது, குடிசைகளில் வாழும் ஏழை எளிய ஆதரவற்ற மக்களுக்காக அனுப்பப்படுவற்காகவே என்பதை உணர்ந்து முதன் முதலில் தனது பணியை, சேவையைத் தொடங்கிய போது உடனடியாக அவர் ஏற்றுக்கொள்ளப் படவில்லை, மாறாக அவர் கையிலே காரி உமிழப்படுகிறார். இருப்பினும் அவர் சோர்ந்து போகவில்லை. அழைத்த இறைவன், அனுப்பிய இறைவன் உடனிருப் பதை உணர்ந்தார். பணியை தொடர்ந்து செய்தார். அவரைக் காரி உமிழ்ந்தவர்கள் அவரை தங்கள் கரங்களில் ஏந்திக் கொண்டார்கள். நமக்கும் எதிர்ப்புகள் இருந்தாலும் அழைத்த இறைவன், நம்மை அனுப்புகிற இறைவன் நம்முடன் இருக் கிறார் என்பதை உணர்ந்து இறையாட்சிக் காக உழைப்போம்.

அழைத்த இறைவன் அனுப்பிய இறை வன் அனைத்து சூழ்நிலையிலும் நம்முடன் இருக்கிறர். அவரே கூறியிருக்கிறார். “இதோ உலக முடிவுவரை எந் நாளும் நான் உங்களோடு இருக்கிறேன்” ●



## இறங்கி வந்து நெருங்கி வந்த உறவு

ME (12)

**Sr.M.லில்லி மரி** ME, புதுச்சேரி.

**உ**றவு வளர்வது உணவில், விருந்தில். எனவே இயேசுவும் தம் நெருங்கி வந்த உறவைத் தொடங்கி வைக்க உணவைத் தேர்ந்துகொண்டார். பாஸ்கா விருந்தைத் தேர்ந்துகொண்டார்.

இயேசு நிகழ்த்திய முதல் திருப்பலியான புனித வியாழன் இராவுணவின்போது நற்கருணை என்னும் அருட்சாதனம் நிறுவப்பட்டது. திவ்ய நற்கருணை பக்தியையும் திருப்பலியையும் பிரிக்க முடியாது. எனவே இந்த வாரத்திலிருந்து நற்கருணைப்பலியைப் பற்றிப் பார்ப்போம்.

திருத்தந்தை பன்னிரண்டாம் பத்திநாதர் 1947 நவம்பர் 20-ஆம் தேதி எழுதிய “Mediator Dei” அதாவது **“இறைவனுக்கும் மனிதருக்கும் இடையே உள்ள நடுவர்”** என்னும் சுற்று மடலையும் Daniel Rops என்னும் இறையியல் வல்லுனர் பிரஞ்சு மொழியில் எழுதிய “Missa Est” (Mass is) அதாவது “இது திருப்பலி” என்னும் நூலையும் ஆதாரமாகக் கொண்டு எழுதுகிறேன்.

**திருத்தந்தையின் சுற்றுமடலில் மேலோங்கி நிற்கும் கருத்துகள்:**

திருப்பலி என்பது பொது வழிபாடு. தனிப்பட்ட முறையில் செய்யப்படும் நேர்ச்சை அல்லது வழிபாடல்ல. குரு தனியாகத் திருப்பலி நிகழ்த்த நேரிட்டாலும் அனைத்து உலகோடும் இணைந்து செலுத்தும் வகையில் உரையாடல் பாணியில் சடங்குகளும் மன்றாட்டுகளும் அமைந்துள்ளன. திருவழிபாடு உள்ளார்ந்ததும் வெளிப்படையானதுமாகும். உண்மையான பக்தியின் கனியான உள்ளார்ந்த தியானம் இதில் இடம் பெறுகிறது. குரு மட்டுமல்ல மக்களும் தங்களுடைய தனி வழிபாடுபோல திருப்பலியில் பங்கு பெறுதல் கூடாது. “இறங்கிவந்து நெருங்கி வந்த உறவை நாமும் ஒருவர் அருகில் ஒருவர் நெருங்கி வந்து பங்கு பெற வேண்டாமா? ஒருவர் அருகில் மற்றவர் அமர்ந்து பங்கு பெற்றால் அது கிறிஸ்தவ சமூக உறவுக்குச் சான்றாக இருக்காதா? ஏன் கோவிலில் வாயிலில் நின்று பங்கு பெற வேண்டும்?

திருவழிபாட்டின் மன்றாட்டுகள், சடங்குகள் இவற்றில் கையாளப்படும் வார்த்தைகள் எல்லாம் திரு அவையின் அதிகாரத்தால் ஒழுங்கு செய்யப்படுகின்றன. திருநிலைப்படுத்தப்பட்ட குரு இதில் முக்கியத்துவம் பெறுகிறார்.

“திருவழிபாட்டின் முன்னேற்றமும் விரிவாக்கமும்” என்னும் நான்காம் எண்ணில் திருப்பலி தெய்வத் தன்மையும் மனிதத் தன்மையும் இணைந்திருப்பதைச் சுற்றுமடல் நன்கு தெளிவுபடுத்துகிறது. திருவழிபாட்டின் முன்னேற்றத்துக்காக மாற்றங்களைக் கொண்டுவரும்போது முக்கியமானவற்றைக் கைவிடாது பார்த்துக்கொள்ள வேண்டும் என்கிறது சுற்றுமடல். அதே சமையம் பழைய வழிபாட்டு முறையில் மிதமிஞ்சிய பற்றுதல் கூடாது என்றும் கூறுகிறது.

நற்கருணை ஆராதனை திருப்பலிக்கு அடுத்தபடியாக பின்பற்றிவந்த மிக முக்கியமான பக்தி முயற்சியாகும்.

திருப்பலியில் பாடப்படும் இசைபற்றியும் சுற்று மடல் கூறுகிறது. கிரகொரியன் இசை புனித இசையாகக் (Sacred Music) கூறப்படுகிறது. ஆனால் வத்திக்கான் பொதுச்சங்கத்திற்குப் பின் இந்தியமயமாக்கலின் படி வேறு இசைகள் திருப்பலிப் பாடல்களில் கையாளப்படுகின்றன. ஆயினும் உள்ளத்தை அமைதிக்கும் பக்திக்கும் தூண்டுவதாக இசை இருத்தல் வேண்டும்.



**சிலுவை அடையாளம்:** எங்கெல்லாம் திருச்சிலுவை நாட்டப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் தினமும் கல்வாரிப்பலி நினைவுகூரப்படுகிறது. குரு சிலுவை அடையாளம் வரைந்து திருப்பலியைத் தொடங்குகிறார். அது ஒரு வாடிக்கையுமல்ல, வேடிக்கையுமல்ல. திருப்பலி தொடங்கியது முதல் முடிவு வரை குரு திரு விவிலியத்தின் மீதும் பலிபொருட்கள் மீதும் தன் மீதும் இப்படிப் பலமுறை சிலுவை வரைகிறார்.

திருப்பலி நம் வாழ்வின் மிக மகிழ்ச்சி நிறைந்த அனுபவமாக இருத்தல் வேண்டும். எனவே பின்வரும் செபத்தை ஒவ்வொரு முறையும் திருப்பலிக்காக ஆலயத்துக்குள் செல்லும் முன் மனதுக்குள் சொல்லி இந்த மகிழ்ச்சியை வளர்த்துக்கொள்ளுதல் நல்லது.

**“ஆண்டவரே! என் ஆன்மாவின் உந்தித் தள்ளும் ஆற்றலோடும் நான் உம் மீது கொண்டுள்ள அன்போடும் உம் ஆலயம் வருகிறேன்.”**

பின்னர் குரு “ஆண்டவர் உங்களோடு இருப்பாராக!” என்று வாழ்த்துகிறார். இவ்வாழ்த்தை மரியாவுக்கு கபிரியேல் தூதர் சொன்னார். இதே வாழ்த்தை குருவும் மக்களுக்குக் கூறி வாழ்த்துகிறார். இது மிக கருத்தாழமும் ஆசியும் இணைந்த வாழ்த்து. இதைத் திருப்பலியின் போது ஆறு முறை கூறுகிறார். ஆனால் சில குருக்கள் இதோடு கூட Good Morning என்று கூறுகின்றனர். மேலும் நல்லா இருக்கீங்களா? போன்ற நலம் விசாரிக்கும் வார்த்தைகளையும் சேர்க்கிறார்கள். இவை நல்லவைதான் ஆனால் திருப்பலியில் தேவையா? “ஆண்டவர் உங்களோடு இருப்பாராக!” என்பது எல்லா வாழ்த்தைப்போல ஒன்றா? இந்த வாழ்த்து பழைய ஏற்பாட்டில் ஒருவர் ஒருவரை வாழ்த்தும்போது கையாளப்பட்டது.

**1. நுழைவு செபம்:** திருப்பலியின் தொடக்கத்தில் நுழைவு செபம் என்று ஒன்று உண்டு. அது அன்றைய திருவழிபாட்டின் விழாவை அல்லது அன்றைய வாசகங்களை ஒட்டியதாக இருக்கும். திருப்பலியின் வரலாற்றில் 7-ஆவது நூற்றாண்டில் இது புகுத்தப்பட்டது. புனித ஐந்தாம் பத்திநாதர் “உரோமைத் திருப்பலி முறையை” எங்கும் பின்பற்றப் பணித்தார். “ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம் என்ற அழைப்பைக் கேட்டபோது அகமகிழ்ந்தேன்” (தி.பா.122:1)

நம்முடைய இன்றைய வழிபாடுகளில் வருகைப் பாடல் இதன் இடத்தை எடுத்துள்ளது. ஆனால் இதைத் திருப்பலியின் ஒரு பாகமாகக் கருதாமல் பாடகர்களைச் சார்ந்தது போல எண்ணுகிறோம். பலி பீடம் வர ஆவலாக இருக்கும் ஆன்மாவின் மகிழ்ச்சியை இப்பாடல் குறிக்கிறது. ஆம், இந்த மகிழ்ச்சி எப்படிப்பட்ட மகிழ்ச்சி? இளமையின் பொலிவால் தன் அன்பரான ஆண்டவரைச் சந்திக்க ஆவலாக இருக்கும் ஆன்மாவின் மகிழ்ச்சி இது. அந்த ஆன்மா இறைவனை நேருக்கு நேர் திருப்பீடத்தின் முன் சந்திக்க வந்துள்ளது. ஆண்டவராகிய உமது ஒளி மழை என்னை நனைக்கட்டும். அது எப்போதும் என் பாதைக்கு விளக்காக இருக்கட்டும். இத்தகைய மனநிலையில் திருப்பலியின் நுழைவு இருக்க வேண்டும்.

- தொடரும்

**திருத்தந்தையின் டுவீட்டர் செய்தி:**

♦ “எல்லாவிதமான பொருளிய மற்றும் ஆன்மீக வறுமையும், நம் சகோதரர், சகோதரிகளுக்கு எதிராக இழைக்கப்படும் எல்லா விதமான பாகுபாடும், கடவுள் மற்றும் அவரின் அன்பை நாம் புறக்கணிப்பதால் வருகின்றன.”



# மறைமாநில மாமன்றம் மலர்க முழுமையான மறுமலர்ச்சி

– சுவாமி ஆ. லூயிஸ்.

அன்று ஒரு சிறு குழுவாக புனித இராயப்பர் மீது கட்டி எழுப்பப்பட்ட திருச்சபை. கடவுளின் கிருபையால் இயேசுவின் வழியில், ஆவியின் தூண்டுதலில் ஒரு பெரிய ஆலமரமாக உலகமெங்கும் பரவி உள்ளதை உணர்ந்து இறைவனைப் போற்றுவோம், நன்றி கூறுவோம், நன்மனத்தோடு நாளும் ஆண்டவரோடு இணைந்து வாழ்வோம். சட்டம் இயேசுவை வெளிப்படுத்தும் அடையாளம், சக்தி தூய ஆவியைக் குறிக்கும் அடையாளம். இவ்விரு அடையாளங்களையும் இணைக்கும்போது இறைமை இடம் பெறுகிறது என்று உணர்வோம். திருச்சபையின் சட்ட நூலில் மாமன்றத்தைப் பற்றிய சட்டம் 460 முதல 468 வரை என்று எட்டு சட்டங்கள் உண்டு. அறிந்து அதன்படி கொண்டாடுவோம்.

**சட்டத்தின் சாரம்:**

460: மறைமாவட்ட சமூகம் முழுவதின் நலனுக்காக மறைமாவட்ட ஆயருக்கு உதவி புரிகின்றது.

461: கலந்தாலோசித்தபின், மறைமாவட்ட ஆயரின் கணிப்பில் கொண்டாடப்பட வேண்டும்.

462: மறைமாவட்ட ஆயர் மட்டுமே மறைமாவட்ட மன்றத்தை அழைக்கின்றார். தலைமை ஏற்கிறார். ஓர் ஆயர் பதில் குருவை வழங்கலாம்.

463: மறைமாவட்ட மன்றத்தின் உறுப்பினர்கள் பட்டியல் வழங்கப்படுகிறது.

464: தடைசெய்யப்பட்டுள்ள மன்ற உறுப்பினர், பதில் ஆளை அனுப்ப இயலாது.

465: வாதப்பொருள்கள் அனைத்தும் மன்றத்தில் விவாதிக்கப்படுகின்றன.

466: மறைமாவட்ட ஆயர்தான் சட்டம் இயற்றுபவர். மற்றவர் ஆலோசனை அளிப்பவர்கள்.

467: மறைமாவட்ட ஆயர் மன்ற அறிக்கைகளை தெரிவிக்கின்றார். தல ஆயர் மன்றத்தை இடைநிறுத்தம் செய்யலாம், கலைத்துவிடலாம்.

**சட்டமும் சாரமும்:** சட்டங்கள் எல்லைகளை நமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றன, அத்தகைய எல்லைகளுக்குள் எவ்வாறு இயங்குவது, செயல்படுவது, முயல்வது, முன்னேறுவது என்பதை சாரம் தருகின்றது. பொதுவாக அதிகாரத்தில் உள்ளவர்கள் சட்டங்களைச் சார்ந்து நிற்பர், சட்டத்திற்கு உட்பட்ட மக்கள் ஆவியைப் பற்றிக் கொண்டிருப்பர். சட்டமும் சாரமும் இணைந்து சென்றால் இறைவனுக்கு நன்றி, இல்லையேல் போராட்டங்களுக்கிடையில் கலந்துரையாடி, தேர்ந்துதெளிவு பெறுவது நல்லது. நம்பிக்கையோடு பயணித்தால் அச்சத்திற்கு இடமில்லை.

சட்டங்கள் இருப்பது மனித குலத்திற்காக என்பதை யாரும் எப்போதும் மறந்துவிடக் கூடாது. மனித நேயம் தான் மேலானது, முதன்மையானது என்பதை கடைபிடிப்பது முக்கியமாகும். சட்டம் சிறைப்படுத்தும், ஆவி விடுவிக்கும் என்பதைத் திருத்தூதர் பணி நமக்கு மிகவும் தெளிவுபடுத்தி வருகிறது. இறைவனுக்கு இரக்கம் நிபந்தனையற்றது. அளவில்லாதது. அவரது இரக்கத்தை ஊதாரி மகனைப் போல் தவறாகப் பயன்படுத்தினாலும், தந்தையின் இரக்கத்திற்கு எல்லை இல்லை என்பதை ஏற்போம். மனித நேயத்தின் மணிமுடியாம் கிறிஸ்தவ நேயத்தை அழைப்பின் அர்ப்பண நேயத்தில் நாளும் நாம் சுவைக்க முயல்வோம். கோடிப் பாவம் புரிந்தாலும், நம்மைத்தேடி வரும் தேவனை மறந்துவிட வேண்டாம்.

**மக்கள் மையம்:** "உலகம், வாழ்வு, சாவு, நிகழ்காலம், எதிர்காலம் இவை அனைத்தும் உங்களுக்குரியவைகளே. ஆனால் நீங்கள் கிறிஸ்துவுக்குரியவர்கள்; கிறிஸ்து கடவுளுக்குரியவர்" என்ற அருள்வாக்கை உணர்ந்து ஏற்றுக்கொண்டு "மக்கள்தான் மையம்" என்பதை நாம் எக்காரணத்தை முன்னிட்டும் புறம்தள்ளாமல் இருப்பது மனித, கிறிஸ்தவ, அர்ப்பண வாழ்விலே மிகவும் முக்கியமானது என்பதை மறந்துவிடக்கூடாது. மக்கள் இல்லை என்றால், மற்றவர்கட்கு இடமில்லை. மக்களை நாட்டிலோ, வீட்டிலோ யாரும் பகடைக்காய்களாய் பயன்படுத்தக்கூடாது. எத்தகைய அமைப்பாகவும், அரசாகவும் இருந்தாலும் மக்களைக் கொச்சைப்படுத்துவது மனித நேயத்திற்கு முற்றிலும் எதிரானதாகும். ஏழைகள், படிக்காதவர்களை அனைவரும் மதிப்பது மாண்புமிக்கது.

மக்கள் வழிகாட்டிகளைச் சந்திப்பதைவிட, வழிகாட்டிகள் மக்களை தங்கள் வாழ்வின் சூழ்நிலையில் சந்திப்பது மிகவும் நல்லது. இயேசு மக்களைத் தேடி வந்தார், சாதாரண மக்களோடு இருந்தார் என்பதை திருச்சபை மறந்துவிடக் கூடாது. தனி ஒருவரில் கடவுள் உறைவது போல, மக்கள் மத்தியிலும் கடவுள் உறைந்திருக்கிறார். நான்கு இலட்சம் மக்கள் இருக்கின்றனர். இவர்களில் எத்தனைப் பேரை வழிகாட்டிகள் அறிந்துள்ளனர் என்பது கடினமான சோதனையாகும். நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளை நன்கு அறிவான் என்பது அருள்வாக்குதான். இயல்பாக சாதாரணமாக வழிகாட்டிகள் மக்களை சந்திப்பது மிகவும் நல்லது. தங்கள் தேவைகளை முன்னிட்டு சந்திப்பது பெரிதல்ல, அது நமது கடமை.

ஆவியால் தூண்டப்பட்டு வழிநடந்து வந்தால் திருஆட்சியாளர்கள், துறவிகள் நிச்சயமாக மக்களை சந்திப்பார்கள். நிறுவனங்களிலும், கொண்டாட்டங்களிலும் நாம் அடைபட்டு இருப்பது அவ்வளவு பயன்மிக்கதல்ல. அர்ப்பணிக்கப்பட்டவர்கள் சிறைபட்டிருப்பதைவிட விடுதலை வாழ்வை மேற்கொள்வது மேலானது. புனித அகுஸ்தீனார் கூறுவது போல, "அன்பு செய், பிறகு எதையும் செய்" நாம் அன்பு செய்திடின் மக்களைவிட்டு பிரியமாட்டோம். திருமணத்துறவில் தனிமையை செளகரியங்களால் நிரப்பிக்கொண்டு ஒதுங்கிவிட்டால், பயங்கர சோதனைகட்கு ஆளாக நிறைய வாய்ப்புண்டு.

**மாமன்றம் தொடர்கிறது:** மறைமாவட்டத்தில் மாமன்றம் பற்றி திட்டமிட்டு முன்முயற்சிகள், திட்டங்கள், வினாத் தொடர், பகிர்வு, கலந்துரையாடல் எல்லாம் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு, வருகிறது. மக்கள், இளையோர், பெண்கள், தலைவர்கள், காரியக்காரர்கள், கன்னியர்கள், குருக்கள் அருட்சகோதரர்கள் அனைவரும் விதிவிலக்கு இன்றி மாமன்றத்திற்கு முழு கவனம் செலுத்தி, ஈடுபடுவது நமது விசுவாசத்தின், அழைப்பின், அர்ப்பணத்தின் சான்றாகும். சர்வவியாபியும் தன்னால் முடிந்த முயற்சிகளை மேற்கொள்ளும். அனைவரும் ஆவியால் தூண்டப்பட்டு அனைவரையும் அரவணைத்துக் கொண்டு முழுமையான மறுமலர்ச்சியை முழு மூச்சுடன் மேற்கொள்வோம். தூய ஆவியார் நமது மறைமாவட்டம் முழுவதையும் மிகவும் கருணையோடு கண்காணித்து வருகிறார். நல்ல மனதோடு அனைவரும் ஒன்று கூடி நம்மை புதுப்பித்துக் கொள்வோம் மற்றவர்களையும் புதுப்பிக்க முயல்வோம், மன்றாடுவோம். மரியே வாழ்க! ●

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :** சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன்பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

2018-2019 சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO செய்பவர்கள் **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.

# அருள்மிகு தந்தை C.சூசைகண்ணு அடிகளார் இறையடி சேர்ந்தார்.

**27-06-2018**



**அருள்மிகு தந்தை C. சூசைகண்ணு** 27-06-2018 புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு இறையடி சேர்ந்தார்.

**பிறப்பு:** நமது உயர் மறைமாவட்டம், இருதயம்பட்டு பங்கு, திரு. S. சின்னப்பன் - திருமதி. அன்னம்மாள் ஆகியோரின் மகனாக அருட்தந்தை **C. சூசைகண்ணு** அவர்கள் 02-08-1955-இல் பிறந்தார். 17-08-1955-இல் இருதயம்பட்டில் திருமுழுக்குப் பெற்றார்.

**கல்வி:** தமது தொடக்கப்பள்ளி கல்வியை இருதயம்பட்டில் 1 முதல் 8 வகுப்புவரை R.C. நடுநிலைப் பள்ளியிலும், 8ம் வகுப்பு வரை திண்டிவனம் புனித அன்னாள் பள்ளியிலும், 9 வகுப்பு முதல் 11ம் வகுப்பு வரை கடலூர், புனித வளனார் பள்ளியிலும் கல்வி பயின்றார். PUC மதுரை கருமாத்தூர், புனித அருளானந்தர் கல்லூரியிலும், BA பெங்களூரிலும் கல்வி பயின்றார்.

**குருத்துவ பயிற்சியும், திருப்பொழிவும்:** 1970-1974 வரை கடலூர், புனித ஆஞ்னேஸ் இளங்குருமடத்திலும், 1976-1984 வரை மெய்யியல் மற்றும் இறையியலும் பெங்களூர் புனித பேதுரு குருத்துவ கல்லூரியில் பயின்றார்.17-5-1984 அன்று, புதுவை, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் பேராயர் மேதகு டாக்டர் V.S.செல்வநாதர் ஆண்டகை அவர்களால் குருவாக அருட்பொழிவு பெற்றார்.

**குருத்துவப் பணி:** ஜுன் 1984 - நவம்பர் 1984 வரை அத்திப்பாக்கம் உதவி பங்கு குருவாகவும், 5-12-1984 முதல் ஜன.1986 வரை கோனான்குப்பம் உதவி பங்குகுருவாகவும், ஜனவரி 1986 முதல் அக்.1987 வரை இறையூர், உதவி பங்கு குருவாகவும் பணியாற்றினார். 26-10-1987 முதல் ஜுன் 1990 வரை நெய்வேலி-2, மந்தாரக்குப்பம் பங்கு குருவாகவும், 25-6-1990 முதல் ஜுன் 1996 வரை குரும்பாகரம் பங்குகுருவாகவும், 24-6-1996 முதல் ஆக.2003 விரியூர் பங்குகுருவாகவும், பணியாற்றினார். செப்.2003 முதல் 10.9.2004 வரை மருத்துவ விடுப்புக்குப்பின், 10-9-2004 முதல் 13-7-2005 வரை நெல்லிக்குப்பம் பங்குகுருவாகவும், 15-7-2005 முதல் 15-2-2006 வரை மைக்கேல்புரம் பங்கு குருவாகவும் பணியாற்றினார். 15-2-2006 முதல் 5-7-2006 வரை மருத்துவ விடுப்பில் இருந்தார். 5-7-2006 முதல் 6-10-2008 வரை சின்னசேலம் பங்குகுருவாக திறம்பட பணியாற்றினார். 7-10-2008 முதல் 31-5-2010 வரை கடலூர் தூய வளனார் கல்லூரியில் தங்கி, மருத்துவ உதவிகள் பெற்றபின், 1-6-2010 முதல் 3-6-2013 வரை கடலூர் தூய வளனார் கல்லூரி - விடுதி காப்பாளராக பணியாற்றினார். 4-6-2013 - அக்கராபாளையம் பங்குகுருவாகவும், ஜுன் 2016 முதல் அகரக்கோட்டாலம் பங்கு குருவாகவும் பணியாற்றினார்.

தொடர் முதுகுவலியும் சளித் தொல்லையும் இருந்ததால் 01-02-2017-இல் சேலம், அரிசிபாளையம், செயின்ட் மேரிஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். அங்கிருந்து புதுவை-பிம்ஸ் மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பப்பட்டார். 14-04-2018-இல் அவருக்கு நுரையீரல் கேன்சர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. 15-01-2018-இல் புதுவை MVR மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, 16-01-2018இல் புதுவை-அரியாங்குப்பம் அருகிலுள்ள புதுவை கேன்சர் டிரஸ்ட் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு அனுப்பப்பட்டார். எம்மாவுஸ் குருக்கள் ஓய்வு இல்லத்தில் தங்கி மேற்சொன்ன மருத்துவமனைகளில் தொடர் சிகிச்சை பெற்றார். அவரது உடல்நிலை மிகவும் மோசமானதால் MVR மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். 24-6-2018 அன்று மதியம் 1.00 மணியிலிருந்து அவரால் எதுவும் பேச இயலவில்லை, உணவும் எதுவும் உட்கொள்ளவில்லை. 27-06-2018 புதன் - இரவு 7.30 மணிக்கு அருட்தந்தை C.சூசைக்கண்ணு அவர்கள் இறைபதம் சேர்ந்தார்.

அன்று இரவு 9.30 மணி அளவில் அன்னாரது திருவுடல் நமது பேராயர் இல்லம் கொண்டுவரப்பட்டது. நமது பேராயர் அவர்கள் அருட்தந்தையின் திருவுடலை மந்திரித்து செபித்தார். 28-06-2018 மாலை 3.30 மணி வரை, அருட்தந்தை C.சூசைக்கண்ணு பணியாற்றிய பங்குகளிலிருந்து ஏராளமான இறை மக்கள் வருகை புரிந்து அவருக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

மாலை 3.30 மணிக்கு தந்தையவர்களின் திருவுடல் பவனியாக ஜென்மராக்கினி அன்னை பேராலயத்திற்கு கொண்டுவரப்பட்டு, நமது உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் அவர்கள் தலைமையில் கூட்டு பாடல் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. சுமார் 110 அருட்தந்தையர்கள் இக்கூட்டுத் திருப்பலியில் இணைந்து நிறைவேற்றினர். ஏராளமான இறைமக்களும் அருட்சகோதரிகளும் கலந்துகொண்டனர்.

நமது முதன்மை குரு பேரருள்திரு ஆ.அருளானந்தம் அவர்கள், திருப்பலி முன்னுரை வழங்கினார்: அருட்தந்தை C.சூசைக்கண்ணு அவர்களை சந்தித்தபோது “பயப்படாதீர்கள்” என்று சொன்னபோது, கடவுள் இதைவிட நல்லது கொடுத் திருந்தாலும் ஏற்றுக் கொண்டிருப்பேன் அல்லவா! இறைச்சித்தம் - என்று கூறினார். இறைவனின் சித்தத்துக்கு பணிந்திருந்தவர். “இறப்பதற்காக பிறந்தோம், இறக்கும்வரை இரக்கமுள்ளவராய் இருப்போம்” என்று அன்னை தெரேசா சொல்வது போல, தந்தை அவர்கள் இரக்கமுள்ளவராகவும், அயராது உழைப்பவராகவும் இருந்தார் என்று கூறினார்.

அருட்தந்தை அ. பெஞ்சமின் அவர்கள் மறையுரை ஆற்றினார்: தி.வெ.14:13 “ஆண்டவரோடு இணைந்து அவரில் இறப்போர் பேறுபெற்றோர்” என்ற விவிலிய மேற்கோள்காட்டி, தந்தை அவர்கள் இறைவனோடு இணைந்த நிலையில் இறையடி சேர்ந்தார். அவர் இறைவனின் சித்தத்தை ஏற்று நிறைவேற்றினார். குருத்துவ பணியிலும், இறப்பிலும் இந்த நல்ல பக்தி மிகு பண்பை வெளிப்படுத்தினார். அந்த வகையில் இறைவாக்கினர் ஆமோஸ் போல துணிவுடன் அநீதியை தட்டிக் கேட்பவராக இருந்தார். சோழம்பட்டில் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்காக போராடினார்.

சோழம்பட்டு அருகில் அழகாபுரம் ஊரில் அன்னைக்கு அழகிய ஆலயம் எழுப்பினார். சங்கராபுரம் நகரில் ஆலயம் எழுப்பப்பட நிலம் வாங்கினார். மிகுந்த முன்யோசனை மிக்கவராகவும், பிரச்சினைகளை நிதானமாக அணுகவும், பாரபட்சமின்றி தீர்வுகாணவும் இயன்றவராயிருந்தார்.

நற்செய்தி வாசகத்தில் - யோவான் 2:1-11 அன்னை மரியா இயேசுவை நெறிப்படுத்தி, இயேசு தண்ணீரை திராட்சை இரசமாக்க அதனால் அந்த திருமண வீட்டாரின் நன்மதிப்பு காப்பாற்றச் செய்தார். இதே பண்பு கொண்டவராக அருட்தந்தை C. சூசைக்கண்ணு தமது குருத்துவப் பணியை நிறைவேற்றினார். அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவோம் - இவ்வாறு தந்தையவர்கள் மறையுரையை நிறைவு செய்தார்.

நமது பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில், அருட்தந்தை C. சூசைக்கண்ணு அவர்களின் பண்பு நலன்களையும் பணிவாழ்வையும் குறிப்பிட்டு பேசினார். அவர் அளித்த பணியை இன்முகத்தோடு ஏற்றுக் கொண்டார், இறைச்சித்தத்திற்குப் பணிந்து பணிபுரிந்தார். அவர் நோயுற்றபோதும் புன்முறுவலோடு வலிகளையும் வேதனை களையும் ஏற்றுக்கொண்டு, இயேசுவின் சிலுவைப் பாடுகளோடு இணைந்து ஒப்புக்கொடுத்தார் என்றுரைத்து, அருட்தந்தையின் உடன் பிறந்தவர்களுக்கும் குறிப்பாக அருட்சகோதரி லூர்துமரி, கார்மல் சபை, ஏற்காடு, அவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்.

திருப்பலிக்குப்பின் மாலை 5.00 மணி அளவில், நமது உயர் மறைமாவட்ட பேராயர் அவர்களின் இறுதிச் செபத்திற்குப்பின் அருட்தந்தை C. சூசைக்கண்ணு அவர்களின் திருவுடல் குருக்கள் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அருட்தந்தை சி. சூசைக்கண்ணு அவர்களின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றி அடைவதாக.

(- தொகுப்பு: ஆசிரியர்)



# கிறிஸ்துவின் அழைத்தல்

–Dr. அ. மதலைமுத்து, புதுவை–3.

***சுயசித்திரம்:*** உலா சென்ற ஒரு மன்னர், மரம் வெட்டி பிழைத்த ஒரு வனைக் கண்டார், இரங்கினார், படைத் தலைவன் ஆடையை அணிவித்தார், போர் வாளையும் கொடுத்தார், "மக்களைக் காப்பாற்று" என்றார். அதைப் போல கடவுள் நமக்கு புதிய வாழ்க்கையைக் கொடுப்பது புதிய பணிக்காக; நமக்கு புதிய வாழ்க் கைத் தேவைப்படுகிறது. நாம் நம் பலவீனங்களை, கடந்த கால கழிவுகளை ஒத்துக்கொள்ள வேண்டும். அது நேர்மை யின் அடையாளம், மற்றும் உண்மைத் தூரிகையால் நாம் வரையும் சுய சித்திர மாகும். நம் மனமாற்றத்தின் சான்றாகும். திருத்தூதர் பவுல் தன்னை "பாவிகளுள் முதன்மையான பாவிநான்" (1திமொ.1:15) என்று விவரிக்கிறார். அதைப் போல நம் பாவ நிலையை நினைத்து பார்க்கிறோமா? ஆண்டவரிடம் சொன்னோமா? பவுல், அதனால், கடவுளின் இரக்கத்தைச் சுவைத்தார். அவர் இரக்கத்தை எந்த அளவிற்கு அனுபவித்தார் என்பது அவர் அவருடைய பாவத்தின் தீமையை எந்த அளவிற்கு துல்லியமாகவும், நேர்மையாக வும் மதிப்பீடு செய்திருந்தார் என்பதில் அமைந்துள்ளது. மிகுதியாக மன்னிக்கப் பட்டோர் மிகுதியாக கடவுளிடம் அன்பு செலுத்துகிறார்கள் (லூக்.7:47). சவுல் அதிகமாக மன்னிக்கப்பட்டார்.

***கிறிஸ்துவின் இரக்கம்:*** பவுல் மன மாற்றம் பெற்ற சூழலை நாம் அறிவோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து சவுல் முன் தோன்றி பேசினர். அவரு டைய வாழ்க்கையில் அனைத்தும் மாறியது (திருதூ.9:3-16). இயேசு கொலை வெறி கொண்ட கொடுமைக்கார சவுலை சாவின் பாதையிலிருந்து மாற்றி வாழ்வு மற்றும் மீட்பின் பாதைக்கு மாற்றினார்... திருத் தொண்டில், பணியாளராக அமர்த்தினார் (1திமொ.1:12). கிறிஸ்துவர்களை ஒழிக்க போராடியவரிடம் நற்செய்தி அறிவிப்பு பணி ஒப்படைக்கப்பட்டது. கிறிஸ்தவ மதத்தை ஒழிக்க முயன்றவர், இப்பொழுது கிறிஸ்துவ மதத்தின் கொள்கை பரப்பு செயலாளராக்கப்பட்டார் என்பது கடவுளின் அருஞ்செயலே!

***தகுதி என்ன?:*** ஆண்டவரின் அருள், பவுலுக்கு அளவின்றி பொழியப் பட்டது (1திமொ.1:14). அவர், கடவுளின் இரக்கத்தைப் பெற்றதாகவும் அறிக்கை யிடுகிறார் (1திமொ.1:16). தார்சுஸ் சவுல் கடவுளின் இரக்கத்தால் திருத்தூதர் பவுலாக உயர்த்தப்பட்டார். இதற்கு தகுதி பெற பவுல் எந்த நற்செயலையும் செய்ய வில்லை. நாமும் தகுதியில்லாத தாழ் நிலையிலிருந்த போதுதான் கடவுளின் இரக்கத்தைப் பெற்றோம். தகுதியில்லாத ஒருவருக்குக் காட்டப்படும் கடவுளின் அன்புதான் இறை இரக்கமாகும். ஆக, கடவுளின் இரக்கம் மட்டுமே இவைகளை நிகழ்த்தியது. "நான் திருத்தூதர் களுடையே மிகக் கடையவன். திருத்தூதர் என அழைக்கப் பெற தகுதியற்றவன். ஏனெனில், கடவுளின் திருச்சபையைத் துன்புறுத்தினேன். ஆனால், இப்போது நான் இந்த நிலையில் இருப்பது கடவுளின் அருளி னால்தான்... திருத்தூதர்கள் எல்லாரையும் விட உழைத்தேன். உண்மையில் நானாக உழைக்கவில்லை; என்னோடிருக்கும் கடவுளின் அருளே அவ்வாறு செய்தது" (1கொரி.15:9-10) என பவுல் சான்று பகர்கிறார். இது நமக்கு நல்ல உதாரணமாகும்.

***காரணம் என்ன?:*** "பாவிகளை மீட்க கிறிஸ்து இயேசு இவ்வுலகிற்கு வந்தார்" (1திமொ.1:15). சவுலின் மனமாற்றம் என்பது இயேசுவின், இறைத்திட்டப்பணி நிறை வேற்றத்தின் தொடர்ச்சி. ஆண்டவரின் இரக்கம் அன்று எவ்வளவு தேவையாக இருந்ததோ அதே அளவிற்கு நமக்கும், நம் பிள்ளைகளுக்கு நம் அயலாருக்கும் தேவையாக இருக்கிறது. ஏதோ சில நல்லவர்களுக்கு, ஏதோ சில சிறிய உதவி களைச் செய்வதற்காக இயேசு கிறிஸ்து விண்ணுலகின் தன் அரியணையை விட்டு விட்டு உலகிற்கு வரவில்லை. உலகம் செய்யாததைச் செய்ய வந்தார். கடவுளின் இரக்கம், சவுலின் வாழ்க்கையில் மகத் தான மாற்றத்தை உண்டாக்க அரிதான காரிய ஊக்கியாக (Catalyst) இருந்தது, திருச்சபையை வளர்த்தது.

***வாழ்க்கைப் புத்தகம்:*** கடவுளின் இரக்கத்தை ஒருவர் பெற்ற பிறகு அவரு டைய வாழ்க்கைப் புத்தகத்தில் ஒரு பக்கம் புரட்டப்படுவதில்லை, வாழ்க்கையே புரட்டிப் போடப்படுகிறது. ஆண்டவர் மக்களைக் காப்பாற்ற பொறுப்பு போர் வாளைத் தருகிறார். கிறிஸ்துவின் இரக்கத்தை நாம் சுவைத்த பிறகு நம் வாழ்க்கை எந்தெந்த வகையில் மாறியது? நம்மில் ஊற்றெடுக்கும் கிறிஸ்துவின் அன்பு நம் வாழ்க்கையிலும், அயலார் வாழ்க்கையிலும் எந்தெந்த கனிகளைத் தருகிறது என்பது இறை இரக்கத்தின் பயன்களாக இருக்கும்.

***ஆண்டவரின் அழைத்தல்:*** நாம் புதிய இலக்குகளைக் கண்டறிந்து, அவை களை வெல்ல முயலுகிறோமா? புதிய வாய்ப்புகளை தேர்ந்தெடுக்கிறோமா? அன்பு பெருகியுள்ளதா? அதை நிறை வாகப் பகிர்கிறோமா? அதிகமாக விட்டுக் கொடுக்கிறோமா? அதிகமாகத் தட்டிக் கொடுக்கிறோமா? ஒடுக்கப்பட்டோர் பக்கம் நிற்கிறோமா? பொறுத்துக் கொள்கி றோமா? அயலாரின் பசியையும் பயத்தை யும் பகிர்ந்து கொள்கிறோமா? நற்செய்தியை அறிவிக்கிறோமா? இந்த வினாக்கள் சார்ந்த அழைத்தலைத் தான் ஆண்டவர் விடுக்கிறார். நாம் மீண்டும் இருளில் விழாமலிருக்க கிறிஸ்துவை பற்றிக் கொள்வோமா? இந்த கேள்விகள் நம் தியான சிந்தனையாக இருக்கட்டும். நாம் நற்கனிகளைத் தரவே ஆண்டவர் அழைக்கிறார். ஏற்போமா நண்பர்களே? ●

## சவுலே! சவுலே!

- ச. செல்வராஜ், விழுப்புரம்.

கிறித்துவை ஏற்றோரைத் துன்புறுத் திய சவுலை "சவுலே! சவுலே!ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்" என்றார் இறை இயேசு அன்று!

இன்றும் –
மானுடம் இறை கட்டளைகளையும்
நியமங்களையும் மீறி நடக்கும் போது
பிறர்சினேகம் அற்றுப் போகும்போது
சுய ஒழுக்கம் தடம் புரளும் போது
பெண்ணினம் மாண்பை இழக்கும் போது
பிஞ்சுக் குழந்தைகள் சிறார்கள்
சிதைக்கப் படும் போது

அப்பாவிகள் அநியாயமாய் அழிக்கப்படும் போது
பொய் பித்தலாட்டம் கோலோச்சும் போது
பொய்யாணையிட்டு கடவுளை நிந்திக்கும்போது
பொதுநலன் என்று தன்னலம் பேணும் போது
ஏழ்மையைச் சுரண்டும் போது

உண்மையைச் சாகடிக்கும் போது
எதற்கும் ஆசைப்படு எதுவும் தப்பில்லை
என்று திசை திருப்பும் போது
அடிதட்டுமக்களை அடிவருடிகளாய் நினைக்கும் போது
எதிர்மறை எண்ணத்தால் உயிரை



மாய்த்துக் கொள்ளும்போது
கசப்பு வெறுப்போடு பிறரைக்
காயப்படுத்தும் போது

பொறாமையினால் அவதூறு பரப்பி
நடத்தைப் படுகொலை செய்யும் போது
பணத்திற்காய் எதையும் விற்கும் போது
அறநெறிப் பிறழ்ந்து அக்கிரமத்தில் வாழும்போது
`கையூட்டு' அன்றாட வாழ்வாகும்போது

கடவுளுக்குரியதை கடவுளுக்கும்
மனிதனுக்குரியதை மனிதனுக்கும்
செய்யாத போது
பரிந்துரை பரிவர்த்தனைகளை ஏற்கும்போது
– கேட்கிறார் ஆண்டவர்

சவுல் தூய பவுலானார்
இறைசித்தம் நிறைவேற்றினார்
மாறாத சவுல்கள்?
மாறுவோம்! மாற்றுவோம்!

## விண்ணக வாழ்வின்
## 5-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 14-04-1925



மறைவு: 05-07-2013

**திருமதி. மரி அந்துவானெத் சேவியர்**

"நான் ஆண்டவருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவரும் என் பக்கம் சாய்ந்து எனது மன்றாட்டைக் கேட்டருளினார்."
- தி.பா. 40:1

பிரிவால் துயருறும்
**கணவர், மகன், மகள், மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள்**
காரைக்கால்.



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். ***ச.சாமிமுத்து,*** திருச்சி.



## 19ஆம் படலம்

யாவே கடவுளின் கட்டளைப்படி மோசே, அடுப்பிலிருந்து சாம்பலை வாரிக்கொண்டு, பார்வோன் முன்னிலையில் சென்று நின்று வானத்தில் அதைத் தூவினார். எகிப்து நாடெங்கும் அது மெல்லிய தூசியாகப் பரவி, மனிதர் மேலும் அது வெடித்துப் புண்ணாகக் கூடிய கொப்புளங்களாக மாறி, எல்லா எகிப்தியரையும் வருத்தும் இறைவன் அனுப்பிய ஆறாம் வாதையாக வந்தது. எனினும் அவ்வாதை இசுரயேலரை வருத்தவில்லை.

**60 தாமிர வேதியல் ஆலையால், இயற்கைச் சூழலே மாசுபடுவதால் அந்நிலப் பரப்பில் பரம்பரை பரம்பரையாய் வாழ்ந்துவரும் தமிழகத் தூத்துக்குடி மாவட்ட மக்கள், அந்த நச்சாலையை அகற்றக்கோரி உரிமைக் குரல் எழுப்பியதை, நூறுநாள் அளவு மாறில, மத்திய அரசுகள் கேளாக் காதினராக இருந்ததும் ஏன்?**

தூத்துக் குடிமா வட்டமதில்
சுற்றமாய் வாழ்ந்த மக்களெலாம்
காத்து நூறு நாள்கிடந்தார்!
கரிசனம் இல்லா ஆட்சியரோ,
கூத்துப் பார்ப்பார் போலிருந்தார்
குறைகளைந் தவர்களைக் காக்காமல்!
தேத்து வாரிலாச் சூழ்நிலையில்
சேர்ந்தெழுந் தார்த்தார் கொதிப்படைந்தே!

**61 உரிமைக் குரல் எழுப்பி ஆர்ப்பாட்ட அணிவகுப்பு நடத்திய குடி மக்களைக் காவல் துறையினர் பதற, கதற, சிதறத் தாக்கியதும் ஏன்? மக்களைச் சுட்டு வீழ்த்த ஆணை பிறப்பித்ததும் சரியா? குடியரசில் மக்களைச் சுட்டுப் பயமுறுத்தி அடக்கி ஆட்சி புரிய இவர்களுக்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உரிமை வழங்கியுள்ளதா?**

ஆர்ந்து எழுந்த மக்களையே
ஆள்வோர் காவல் துறையினரைப்
பார்த்துக் காப்பதற் கனுப்பாமல்
பதற வைக்க அனுப்பியதால்,
கூர்த்த மதியிலாப் பொறுப்பாளர்
கொடுத்தனர் கட்டளை சுட்டொடுக்க!
சேர்ந்தே மூர்க்கக் காவலர்கள்
சிதைத்தடக் கிடச்சுட் டாடினரே!

**62 விண்ணையும் மண்ணையும் படைத்து அனைத்தையும் காத்துவரும் கடவுள், உயிர்கள் வாழ்வதற்காய் அவர் படைத்தளித்த இயற்கைச் சூழலைச் சீரழிக்க யாருக்கும் உரிமை இல்லை. நல்லதைச் செய்தால் கருணைக் கடவுள் காப்பதற்கு முன்வருவார். இல்லைஎனில் பார்வோனைத் தண்டித்த கடவுள் இந்த நில உலக தீய ஆட்சியாளர்கள் எவரே ஆயினும் அவர்களைத் தண்டிப்பது உறுதி!**

உலகம் என்றும் இருக்குமடா,
உயிர்கள் அனைத்தும் வாழுமடா,
கலகம் விளைக்கும் காரியத்தைக்
கருதிச் செய்தே நெஞ்சிறிய
புலம்பப் பிறரை வைப்பவனோ,
புரிந்தழிந் தொழியும் நாள்வருமே!
நலத்தை நாடிச் செயல்பட்டால்,
நல்லிறை வந்துடன் காப்பாரே!

**63 "ஓ மானிடா, நல்லது எது என அவர் உனக்குக் காட்டியிருக்கின்றாரே! நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும் உன் கடவுளுக்கு முன்பாக தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார்?" - மீக்கா.6:8.**

கடவுள் வல்லமை அறியாமல்
கனைத்தெழுந் தழிவு வேலையிலே,
தடம்விட் டிறங்கி அறம்மாறி
தருக்கி மக்களை ஆண்டடக்க
திடங்கொண் டெழுந்திடும் ஆட்சியர்கள்
சிதறிக் கதறிச் செத்தொழிவர்!
அடாட நீயோர் மனிதனடா
ஆண்டவ னுள்நீ அடக்கமடா!

**64 மனித வாழ்க்கையில் தஞ்சம் தேடும் நெஞ்சங்கள்! ஏமாற்றும் மனிதர்களின் போலித்தனத்தால்...**

நேர்மை தவறிவிட்டால் - என் அம்மா
நிழலும் சுட்டெரிக்கும்!
பார்வை பழுதாகும் - என் அம்மா
பகலும் இரவாகும்!
போர்வைக் குள்ளிருந்தே - என் அம்மா
புறமிருப்போர் அறியாமல்,
ஆர்வ வாய்ச்சொல்லால் - என் அம்மா
அளக்கின்றார் கலங்கலமாய்!

தொடரும்..

# இதுவா நன்றிக் கடன்

-G. *பொனிபாஸ் ஜூலியன்*, புதுவை-9.



பல நூற்றாண்டுகளுக்கு முன்னால், ஜப்பான் நாட்டில் ஒரு மூட பழக்க வழக்கம் இருந்து வந்தது. அதாவது வயதான பெற்றோரை பிள்ளைகள் வீட்டில் வைத்திருக்க மாட்டார்கள். காட்டுப் பகுதியில் அவர்களுக்கென்று குறிக்கப்பட்ட பகுதியில் விட்டுவிட்டு வந்து விடுவார்கள். அங்கேயே அனைத்து முதியோர்களும் வாழ்ந்து, மரித்து அடக்கம் செய்யப்படு வார்கள். வீட்டில் பெரியோர்கள் இருந்தால், முதிர்ந்த வயதில் அவர்களைக் கண்காணிக்க வேண்டும், அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும், இந்தச் சூழலில் இந்த தவறான முடிவை அந்த நாட்டுச் சட்டம் நிறைவேற்றியது.

ஒரு குறிப்பிட்ட இளைஞன் குடும்பத்தோடு வாழ்ந்து கொண்டிருந்தான்.அவனுக்கு பிள்ளைகள், வயதான ஒரு தாய் இருந்தாள். நாட்டு சட்டப்படி தன் தாயை காட்டிலே கொண்டு விட்டுவிட வேண்டும். ஒரு நாள் நடைபயணமாக அவனும் தாயும் தூரத்தில் உள்ள காட்டுப் பகுதிக்கு நடந்துக் கொண்டிருந்தார்கள். ஏறக்குறைய இருட்டு நேரம். இன்னும் அதிக நேரம் இருட்டில் பயணம் செய்து அவனுடைய தாயை அந்த காட்டிலேயே விட்டுவிட்டு அவன் ஊர் திரும்ப வேண்டும். இது ஒரு சிக்கலான பிரச்சனை. பயணத்தை அவனும் அவன் தாயும் ஆரம்பித்தார்கள். ஆனால் தாய் வெறுமனே அவனுடன் வரவில்லை. ஒரு பெரிய பையில் இலைகளையும் குச்சிகளை யும் வைத்துக் கொண்டு சென்றாள். இவர்கள் இருவரும் நடந்து செல்லும் பாதையில், தாய் இலைகளையும், குச்சி களையும் தூவிக் கொண்டே சென்றாள். ஏறக்குறைய இவர் கள் சென்று அடைய வேண்டிய காட்டை அடைந்து விட்டார்கள். தாய் கொண்டு வந்த பையும் காலியாகிவிட்டது. தாயை விட்டு விட்டு விடைப் பெற்ற மகன், ஓர் சந்தேகத்தை தன் தாயிடம் கேட்டான்: நீங்கள் எதற்காக பை நிறைய இலையையும், குச்சியும் கொண்டு வந்து, அதை நாம் வரும் வழியில் தெளித்து கொண்டு வந்தீர்கள்? உடனே தாய் சொன்ன பதில் அவன் மனதை உருக செய்தது, மட்டு மல்லாமல், அவனை மனமாற்றம் அடையச் செய்தது. அவள் கூறினாள் "நீ திரும்ப போகும் போது வழி தவறி சென்று அலையக் கூடாது என்பதற்காக அந்த இலையையும் குச்சியையும் போட்டுக் கொண்டே வந்தேன். நீ அதை அடையாளம் கண்டு கொண்டு சென்றால், வழி தவற மாட்டாய், உன்னை அது நமது வீட்டிற்கு பாதுகாப்பாக அழைத்து சென்றுவிடும்."

இதுதான் தாயினுடைய உள்ளம். தாய்க்கு இணையாக இந்த உலகத்தில் எதுவும் இருக்க முடியாது. மனிதனுக்குள்ள மூன்று புனித இடங்களில் **தாயினுடைய கருவறையும்** ஒன்று. இதுதான் முதல் புனித இடம். இரண்டாவதாக **ஆலயம்** கடவுள் வாழ்கின்ற இடம். மூன்றாவதாக **வகுப்பறை**; மாணவனை உருவாக்குகின்ற இடம். எந்த சந்தர்ப்பதிலும் தாய் தந்தை யருக்கு இடையூறாக இருக்கக் கூடாது. மேலே குறிப்பிட்ட அந்த மகன் ஊர் மக்களைக் கூட்டி, போராடி அந்தச் சட்டத்தை தூக்கி எறிந்துவிட்டான். தாய் தந்தையார் நடமாடும் தெய்வங்கள் என்பதை ஒருபோதும் மறக்கக் கூடாது.



## நாள்தோறும் செபமாலை செபியுங்கள்

– சகோ.அ.ஆரோக்கியதாஸ், திண்டிவனம்.

சென்ற இதழ் தொடர்ச்சி...

**5) இயேசு நற்கருணையை ஏற்படுத்தியது:** மத்.26:26-28 அவர்கள் உணவருந்திக் கொண்டிருந்த பொழுது, இயேசு அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, அதைப் பிட்டுச் சீடருக்குக் கொடுத்து "இதைப் பெற்று உண்ணுங்கள். இது எனது உடல்" என்றார். பின்பு கிண்ணத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்து "இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள், ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம். பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம்" என்றார். 1கொரி 11:23-30 ஆண்டவராகிய இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இரவில் அப்பத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி அதைப் பிட்டு "இது உங்களுக்கான என் உடல்" என்றார். உணவு அருந்திய பின் கிண்ணத்தையும் எடுத்து, இந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை என்றார். எவராவது தகுதியற்ற நிலையில் இந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் "ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகிறார்" என்று பவுல் கூறுகிறார்.

யோவான் 6:51 "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்" என்கிறார். இயேசு.

எனவே, நற்கருணை விருந்தில் பங்குகொள்வது எவ்வளவு பெரிய பாக்கியம் என நினைத்து, வாடிக்கையாக, வேடிக்கையாக பங்கு கொள்ளாமல், நல்லதொரு ஒப்புரவு அருட்சாதனத்தால் நம்மையே தூய்மைப் படுத்திக்கொண்டு, ஆண்டவருடைய உடல் என்று உணர்ந்து பங்குகொள்ளும் வரம் வேண்டி செபிப்போம்.

**III. துயரம் நிறை மறை உண்மைகள்/செவ்வாய், வெள்ளி:**

**1) இயேசு கெத்சமனித் தோட்டத்தில் இரத்த வியர்வை வியர்த்தது:** மாற்கு 14:32-42 இயேசுவும் சீடர்களும் கெத்சமனி என்னும் பெயர் கொண்ட ஓர் இடத்திற்கு வந்தார்கள், அங்கே அவர் தம் சீடரிடம் நான் இறைவனிடம் வேண்டும் வரை நீங்கள் இங்கேயே அமர்ந்திருங்கள் என்று கூறி, பேதுரு, யாக்கோபு, யோவான், ஆகியோரைத் தம்முடன் கூட்டிச் சென்றார். அப்போது அவர் திகிலும் மனக்கலக்கமும் அடையத் தொடங்கினார். சற்று அப்பால் சென்று தரையில் விழுந்து, முடியுமானால் அந்த நேரம் தம்மைவிட்டு விலகு மாறு இறைவனிடம் வேண்டினார். "என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்" என்று கூறினார். சீடர்கள் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு "மனம் ஆர்வம் உடையதுதான். ஆனால், உடல் வலுவற்றது. எனவே, சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்" என்றார். மீண்டும் சென்று அதே வார்த்தை களைச் சொல்லி இறைவனிடம் வேண்டினார். மூன்றாம் முறையும் செபித்தார். லூக்கா 22:44 அவரது வியர்வை பெரும் இரத்தத் துளிகளைப் போலத் தரையில் விழுந்தது.

நாமும் சோதனைக்கு உட்படாதிருக்க செபிக்க வேண்டும். 1பேதுரு.5:8 அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள். உங்கள் எதிரியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம் போலத் தேடி திரிகிறது என்று உள்ளது. எபேசி.5:15 உங்கள் நடத்தையைப் பற்றி மிகவும் கருத்தாய் இருங்கள். ஞானமற்றவர்களாய் வாழாமல் ஞானத்தோடு வாழுங்கள். இந்த நாள்கள் பொல்லாதவை என்றுள்ளது. எனவே, சோதனையை வெல்ல விழிப்பாயிருந்து செபிக்க அலகையை எதிர்த்து நிற்க வேண்டிய வரம் கேட்டு செபிப்போம். - தொடரும்...

83 இளம் உள்ளங்களுக்கு

## எது வாழ்க்கை?



– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**வாழ்க்கைப் புதிர்:** வாழ்க்கை என்பது எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அது ஒருவருக்கு பஞ்சு மெத்தை; மற்றவருக்கு முள்தரை. ஆனாலும் வெளித் தோற்றத்தில் ஒருவர் மகிழ்ச்சியாக தோன்றினாலும், உள்ளுக்குள் வெந்து கொண்டிருப்பார். வேறொருவர் வாழ்வில் எவ்வளவு நன்மைகள் நடந்தாலும் சோகமாகவே காட்சியளிப்பார்.

**இளைஞனின் கேள்வி:** மிகச் சிறந்த ரஷ்ய எழுத்தாளரும், நாடக ஆசிரியருமான டால்ஸ்டாயிடம் (Tolstoy) ஒரு இளைஞன் வாழ்க்கை என்பது என்ன என்று விளக்குமாறு வினவினான். அதற்கு டால்ஸ்டாய், "நான் உனக்கு ஒரு கதை சொல்வேன். அதன் மூலம் வாழ்க்கை என்றால் என்னவென்று நீ புரிந்து கொள்வாய்" என்றார்.

**டால்ஸ்டாய் சொன்ன கதை:** ஒரு வழிப் போக்கன் ஆபத்தான காட்டிற்குள் சென்று கொண்டிருந்தான். திடீரென்று ஒரு முரட்டு யானை அவனை நோக்கி பிளிறிக் கொண்டு வந்தது. ஒரு வினாடி செய்வதறியாது விழித்தான். அப்போது பக்கத்தில் ஓர் பாழடைந்த கிணறு இருப்பது தெரிந்தது. உடனே உயிரை காப்பாற்றிக்கொள்ளும் நோக்கில் கிணற்றுக்குள்ளே குதித்தான். நல்ல வேளை அவன் குதித்த போது ஒரு மரத்தின் வேர் அவன் கையில் தட்டுப்பட்டது. உடனே அதைப் பிடித்துக் கொண்டு தொங்கினான்.

**நீங்காத ஆபத்து:** இப்போது கிணற்றுக்குள்ளே குனிந்து பார்த்தான். அங்கே வாயை பிளந்து கொண்டு, கொடூர பற்களைக் காட்டிக்கொண்டு, இவனை விழுங்க தயாராகக் காத்திருந்தது ஒரு முதலை. முதலையைக் கண்டதும் அவன் உடல் பயத்தால் நடுங்கியது. எனினும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தன் பார்வையை மேல்நோக்கி உயர்த்தினான். அங்கே ஒரு பெரிய தேன் கூடு; தேன் கூட்டிலிருந்து அவனுக்கு வெகு அருகில் தேன் சொட்டிக் கொண்டிருந்தது. தேனின் இனிமை அவன் நா ஊறச் செய்தது; சுற்றி இருந்த ஆபத்துகளையெல்லாம் மறக்கச் செய்தது. தேனை ருசிக்க ஆரம்பித்தான்.

**இதுதான் வாழ்க்கை:** "கதை முடிந்து விட்டது", டால்ஸ்டாய் அந்த இளைஞனிடம் கூறினார்: இக்கதையில் வரும் யானை, வாழ்க்கையின் கால அளவை, குறிக்கிறது. முதலை வாழ்க்கையின் நிச்சயமான முடிவாகிய (death) இறப்பை குறிக்கிறது. தேன் வாழ்க்கையை வாழ்ந்து பார்த்து விட வேண்டும் என்ற ஆவலைக் குறிக்கிறது. "இதுதான் வாழ்க்கை" சொல்லி முடித்தார் டால்ஸ்டாய். இளைஞன் புதிர் புரிந்தே தெளிந்தவன் ஆனான்.

காலக் கட்டத்தில் பின்னோக்கி செல்ல முடியாது. **முன்நோக்கி செல்ல செல்ல முடிவும் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதால் முன்னே செல்லாமலும் இருக்க முடியாது.** இரண்டையும் அதிகம் எண்ணி பாராமல் இடையில் அமையும் பலவித உறவுகளின் ஈர்ப்பும் சம்பவங்களுமே நம்மை வாழ வைக்கிறது, **இதுதான் வாழ்க்கை.**

**கொரிய தீபகற்பத்தில் அமைதி நிலவ ஊர்வலமும், செப வழிபாடும்:** வட மற்றும் தென் கொரிய நாடுகளில் வாழ்வோர் முழுமையான அமைதியையும், முழு மனித வாழ்வையும் அனுபவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, சோல் பேராயர் கர்தினால் அந்திரேயா யோம் சூ-ஜங் அவர்கள் தலைமையில் ஓர் அமைதி ஊர்வலமும், செப வழிபாடும் மேற்கொள்ளப்பட்டன. கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுத ஒழிப்பை மேற்கொள்வதற்குத் தேவையான அரசு சார் சந்திப்புக்கள் நிகழ்ந்தாலும், அமைதியை நோக்கிய பயணம் இன்னும் தொடர வேண்டியுள்ளது என்று கர்தினால் யோம் சூ-ஜுன் அவர்கள் கூறினார். 68 ஆண்டுகளுக்கு, ஜுன் 25ம் தேதி இரு கொரிய நாடுகளுக்கிடையே உருவான மோதலை நினைவுகூரும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் கொரிய ஆயர் பேரவை 1965ம் ஆண்டு முதல் இந்த அமைதி ஊர்வலத்தையும் செப வழிபாட்டையும் மேற்கொண்டு வருகின்றது. - வத்.வானொலி.

## விண்ணக வாழ்வின்
## 4-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



திரு. V. **இருதயராஜ்**
B.Sc.,M.A., Lab.Tech (Rtd)

**தோற்றம்:19-01-1944**
**மறைவு :11-07-2014**

**ஆண்டுகள் நான்கு கடந்த போதும்
அகலாது நினைவுகள் நெஞ்சில் மோதும்
ஆண்டவர் இயேசுவின் அரசாட்சியில் – நிதம்
அமைதியில் வாழ்ந்திட அர்ப்பணித்தோம் (எம்)
செபம்!**

எமை விட்டுச் சென்றாலும்
எம்முடன் ஒளியாய்
வாழ்பவரே!
என்றும் எம்மைக் காப்பீரே!
எல்லையில்லா இன்பமுடன்
இறைவனில் நீர் இளைப்பாற
காணிக்கையாக்கி
அளிக்கின்றோம்
என்றென்றும் எம்
ஜெபங்களையே!

**நினைவுத் திருப்பலி:** 11.7.2018 புதன்கிழமை காலை **6.00** மணிக்கு புதுவை, திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும், காலை **6.00** மணிக்கு ரெட்டியார்பாளையம், புனித அந்திரேயா ஆலயத்திலும், காலை **6.00** மணிக்கு, உப்பளம், புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்திலும் திருப்பலிகள் நிறைவேற்றப்படும்.

**இவரது பிரிவால் துயருறும்**
**மனைவி: திருமதி.** D. ***மரிய தெரேசா*** Rtd.H.M.
**குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்.**

## விண்ணக வாழ்வின்
## 11-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

**தோற்றம்: 18-05-1976**



**மறைவு: 15-07-2007**

Rev.Fr. **ஜோசப் ஜான்பீட்டர்**
**குருப்பட்டம் : 03-05-2005**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 15-7-2018 காலை 6.15 மணிக்கு இவர் பிறந்த ஊராகிய மைக்கேல்புரத்திலும், 16-7-2018 புதுவை ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்திலும், அவர் பணி யாற்றிய பணித் தலங்களிலும் திருப்பலி நிறைவேற்றப்படும். இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்க அழைக்கிறோம்.

இவரது பிரிவால் துயருறும்
பெற்றோர்: **அகஸ்டின்** ஆசிரியர்
**தார்சியுஸ் மரி**
**உடன் பிறந்தோர் மற்றும் உறவினர்கள்.**
மைக்கேல்புரம்.

---

### தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-173
### ஜனவரி மாத போட்டியின் முடிவுகள்

***விவிலிய பகுதி: மாற்கு நற்செய்தி***

**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 10 பேர்.**

1) ஜேன்ரோஸ்லீன் - தஞ்சாவூர், 2) A. உபகாரசாமி Tr. - விழுப்புரம், 3) I.R. எட்மெண்ட் - காளையார்கோவில், 4) Sr. மேரி லிடியா-பள்ளபாளையம், 5) A. ழன்வியோகாலின் - புதுப்பாளையம், 6) R.C. ரிச்சர்டு பிரிட்டோ-தேனி, 7) S. எமல்டா பீட்டர் -தொண்டாமுத்தூர், 8) ஷீலா விக்டர்-புதுவை, 9) A.ஸ்டீபன் - ஓசூர், 10) R. கிரேஸ் மேரிராபின் - திருச்சி.

***சரியான பதில்கள்:***

**இடமிருந்து வலம்**

| | | |
|---|---|---|
| 1. | வானதூதர் | மாற்.1:13 |
| 3. | மீண்டும் | மாற்.2:13 |
| 4. | அழிவு | மாற்.3:26 |
| 8. | கடந்து | மாற்.6:48 |
| 10. | திறக்க | மாற்.7:35 |
| 11. | மக்களுக்கு | மாற்.8:6 |
| 17. | இன்றும் | மாற்.14:63 |
| 22. | பல | மாற்.13:8 |

**மேலிருந்து கீழ்**

| | | |
|---|---|---|
| 3. | மீண்டும் | மாற்.8:1 |
| 4. | அமைதி | மாற்.4:39 |
| 6. | மட்டும் | மாற்.5:36 |
| 7. | தூசியை | மாற்.6:11 |
| 13. | தடுக்க | மாற்.9:39 |
| 14. | தின்னும் | மாற்.9:48 |
| 18. | கற்கள் | மாற்.13:1 |
| 19. | கள்வர் | மாற்.11:17 |
| 20. | தொட்டு | மாற்.14:20 |

**வலமிருந்து இடம்**

| | | |
|---|---|---|
| 1. | வானம் | மாற்.1:10 |
| 4. | அனுமதி | மாற்.5:13 |
| 15. | தன்மை | மாற்.9:50 |
| 12. | சீடருக்கு | மாற்.9:31 |
| 16. | ஒருவரை | மாற்.10:18 |
| 17. | இயேசு | மாற்கு.10:32 |
| 21. | வேண்டும் | மாற்.12:15 |
| 22. | பரிவு | மாற்.8:2 |
| 23. | கோள்கள் | மாற்.13:25 |
| 24. | அச்சம் | மாற்.16:8 |

**கீழிருந்து மேல்**

| | | |
|---|---|---|
| 2. | விட்டார் | மாற்.1:44 |
| 4. | அவரிடம் | மாற்.3:13 |
| 5. | முளைத்தன | மாற்.4:5 |
| 6. | மக்கள் | மாற்.6:33 |
| 9. | தீய ஆவி | மாற்.7:25 |
| 18. | கனியை | மாற்.11:14 |
| 24. | அது | மாற்.4:31 |
| 25. | நாம் | மாற்.10:33 |

**பாராட்டும், இறை ஆசீரும் பெறுபவர்கள்:** C.பவுலீன் சூசைநாதன் Rtd. Tr–மதுராந்தகம், A. அந்தோணியம்மாள் Rtd.Tr – கூவத்தூர், T. பீட்டர் ஜான், V. ஜெரோசின், P. ஞானசெல்வி, J. அந்தோணிசகாய டெல்பின், A. மலையப்பன், A. ஆனிபிரகாஷ், A.அன்னம்மாள், P. மரியதங்கம், A.செலீன், Z.எலிசபெத் சக்கரையாஸ், A.ஸ்டெல்லாமேரி, A. ரோஸ்மேரி, L. ரோஜா, A. சகாய எல்ஸி, M.செலீன், S.சேவியர்மணி–அமுகப்பபுரம், S. ஹென்றிதாஸ்–வடக்குத்து, A. ஜோசப் அருள்சவரிநாதன், J.நோயல் அருள்தாஸ், குழந்தை தெரஸ்–திருவாக்கவுண்டனூர், S.A.ரீத்து–கூத்தலூர், S.G.ஜோசப் ராஜமாணிக்கம், M.செபாஸ்டியன்–மதுரை, Sr. மரியபுஷ்பம், Sr.ரெஜினாமேரி–புறத்தாக்குடி, S. அமல்ராஜ், S. ரோசாலிமேரி Tr–வடலூர், A.அருமைராஜ்–காந்திகிராமம், A.லில்லி ஜாக்குலின்–கீழ்ப்பெரும்பாக்கம், J.சூசன்னாள்–தூத்துக்குடி, J. ரெபேக்காள் அன்னபாக்கியம்–முத்தையாபுரம், A. உபகாரசாமி, A. மரிய கிறிஸ்துராஜ், R. லூக்காஸ், L.லிட்டில் ஃப்ளவர்–விழுப்புரம், A. ரோஸ்மேரி–வீரக்குறிச்சி, பிலிப் பீட்டர், ஜான் மலையப்பா, F. கிளாராமேரி Tr–வன்னியர்பாளையம், A. அருள்மேரி Tr, L.லீமா ஜெயசீலன்–செல்வபுரம், S. எமல்டா பீட்டர்–தொண்டாமுத்தூர், K. சந்தோஷராணி–பெரம்பலூர், R. உத்திரியமேரி Tr– வடக்குச் செய்யூர், L. ஆரோக்கியமேரி–பள்ளபாளையம், S. ஆரோக்கியமேரி–ஆலங்குடி, I.R.எட்மெண்ட்–காளையார்கோவில், B.மரி தெரேஸ், ஜோஸ்பீன் வர்க்கீஸ்–ரெட்டியார்பாளையம், Sr. ஹெய்சிந்–சாந்தோம், Sr. சின்னராணி, Sr. செலீன்–அணிலாடி, பிலோணமினா சந்தியாகு–புதுவிளாங்குடி, Sr. ப்ளோரட்மேரி, I. ஆரோக்கியசாமி–உளுந்தூர்பேட்டை, A.ஜெசிந்தா அமல்ராஜ் Rtd.Tr–தாராபுரம், S. மேரி ரோசாலி–கணபதி, A. ரோசாலி நீதிதாஸ்–நெடுங்காடு, S. தனசீலி, A. மரியப்பன் Rtd.Tr– விரியூர், Sr. விரோணிக்கம்–செஞ்சி, P.விஜயக்குமார்–பாக்குமுடையான்பட்டு,S.L. மரியதாஸ், L. ஜான்மேரி ஜெரோம், நிர்மலா, G. ஆரோக்கியமேரி, P. சின்னப்பராஜ்–நெய்வேலி, அனனமேரி சாமுவேல்–சரவணம்பட்டி, K.L. இஸபெல்லா லூர்துராஜன், N.P. ஆரோக்கியமேரி பீட்டர், விமலா பேட்ரிக், S.B. தெரசா ரீத்தா பெஞ்சமின், Y.A. லில்லி–C. நம்மியந்தல், R. கிரேஸ்மேரி ராபின், S. கமலம்–திருச்சி, Sr. ஜூலி எலிசபெத், Sr. ஜூலியானா, Sr. பெஞ்சமின்–மாதாக்கோட்டை, A. யூஜின் அமித்தா, A. ஜேன் ரோஸ்லீன்–தஞ்சாவூர், Sr. மேரி ஸ்டெல்லா, Sr. மேரி கபிரியேல், Sr. பாஸ்கல்மேரி–கும்பகோணம். விவியான் இருதயராஜ், ரோஸ்லீன் சார்லஸ், M.கிரேஸி முத்துச்சாமி, கிரிஜா புரோஸ்பர்–பெரும்பண்ணையூர். – தொடரும்...

# அறச்செல்வி கர்மேலா லெபோ அவர்களின் நூற்றாண்டுப் புகழஞ்சலி







**மண்ணில்**
**14.07.1918**
**ராயபுரம்,**
**சென்னை**

**விண்ணில்**
**10.03.2003**
**கார்ழ் ல**
**கொனேஸ்**

இவர் புதுவை மாநகரின் புகழ் பெற்ற அறச் செல்வி. கர்தினால் லூர்துசாமி ஆண்டகை முதல், ஆயர் பேராயர்கள், பங்குக் குருக்கள், கன்னியர், மக்கள்... என அனைவரின் நன்மதிப்பைப் பெற்றவர். 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பலத்த எதிர்ப்பையும் மீறிக் கல்வி பல கற்றுத் தமிழில் வித்துவான்,இந்தியில் விசாரத், ஓமியோபதி மருத்துவம், மலையாளம், தெலுங்கு.........மொழிகள் எனப் பல பட்டங்கள் பெற்ற பன்மொழிப் புலவர். சர்வவியாபியின் பொன்விழாவுக்காக நடத்தப்பட்ட சிறுகதை போட்டியில் முதல் பரிசு வென்றவர்; பல்லாண்டுகள் சர்வவியாபியில் பல துறைகள் பற்றி எழுதிய **சிறந்த எழுத்தாளர்.** இவர் எழுதி வாழ்த்துரை வழங்காத பேராயரோ, ஆயரோ, குருக்களோ இல்லை எனலாம். மரியாயின் சேனைத் தலைவி, எலிசபெத் கான்பரன்ஸை வழிநடத்தியவர், பாரத் சேவக் சமாஜத்தில் பணி புரிந்தவர்; லயன் கிளப்பின் உறுப்பினர்; தலை சிறந்த சமூகச் சேவகர்; வேசாந்தே போல் சங்கத்தின் தலைவி; புதுவைக் கம்பன் கழகத்தின் வாழ்நாள் உறுப்பினர்நல்லாசிரியர் விருதை முதல் முதலாகப் பெற்றுப் பல பள்ளிகளில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றித் தலை சிறந்த மாணவிகளை உருவாக்கியவர். புதுவை கர்மேல் மடத்தின் பெரிய தாயாராக விளங்கும் அருள்பணி மரி கிராசியாஸ் தாயார், அறசெல்வியின் மாணவி என்பது குறிப்பிடத்தக்கது. தனக்கெனச் சொத்து சுகம் தேடியது இல்லை; சுயநலக் கீதம் என்றுமே பாடியது இல்லை ஈட்டிய செல்வம் அனைத்தையும் **‘செல்வத்துப் பயனே ஈதல்’** கொள்கைப் படிக் கோவில்கள் குருக்கள், கன்னியர், ஏழைகளுக்கும், இன்னார் இனியர் என்னாது எல்லார்க்கும் வாரி வாரி வழங்கிய வள்ளல் அதனாலேயே **‘அறச்செல்வி’** எனப் புகழ் பெற்றவர். சூசையப்பர் மீது மிகுந்த பற்றுக் கொண்ட இவர்களுக்குச் **‘சேசு மரி சூசை’** என்பதே தாரக மந்திரம். இறுதி வரை நினைவு இழக்காமல் இருந்து திவ்விய நற்கருணையைப் பக்தியோடு உட்கொண்டு இறுதித் திருவருட்சாதனங்களைப் பெற்று இறைவன் திருவடி சேர்ந்தவர்.

இவர் புகழ், காலங்கள் கடந்தாலும் ஆலமரமாக நின்று நிலைக்கும்! இவர்தம் ஆன்மா இறைவன் திருமுன் என்றென்றும் நின்று ஒளிர வேண்டிக்கொள்வோம்.

**தமக்கையின் அன்பினை நாடொறும் நினைந்து உருகும்**

**தம்பி: பெஞ்சமின் லெபோ - தம்பி மனைவி லூசியா லெபோ**
**எங்கள் குலக் கொழுந்துகள்**
**பிரிழித் ரோஸாஸ் லெபோ, அனிதா குளோதியா**
**கோவிந்தராசன் லெபோ, தொமினிக் லெபோ**

**29 புதிய பேராயர்களின் பாலியம் அர்ச்சிப்பு:** கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல், இவ்வாண்டு ஜூன் மாதம் முடிய கத்தோலிக்கத் திருஅவையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமனம் பெற்ற 29 புதிய பேராயர்கள் அணியக் கூடிய பாலியம் என்ற கழுத்துப்பட்டைகளை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஜூன் 29, இவ்வெள்ளியன்று அர்ச்சித்தார். இந்தியாவின் பெங்களூரு உயர் மறை மாவட்ட பேராயர் பீட்டர் மச்சாடோ அவர்களும், இராஞ்சி உயர் மறை மாவட்ட பேராயர் பீலிக்ஸ் டோப்போ அவர்களும் திருத் தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்ட 29 புதிய பேராயர்களில் இருவர் என்பது குறிப்பிடத்தக்கது. புனித பேதுருவின் வழித்தோன்றல் என்பதை உறுதி செய்யும் பாலியம் கழுத்துப்பட்டை, செம்மறியின் உரோமைத்தினால் உருவாக்கப்படுகின்றது. - வத்.வானொலி.

**முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட், புதிய கர்தினால்கள்:** ஜூன் 28, இவ்வியாழன் மாலையில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 14 புதிய கர்தினால் களுக்கு, தொப்பியும், மோதிரமும் அணிவித்து பொறுப்புக் களை ஒப்படைத்த நிகழ்வுக்குப்பின், 14 புதிய கர்தினால் களுடன், முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர் களைச் சந்தித்தார். வத்திக்கான் முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் தங்கியிருக்கும், “Mater Ecclesiae” இல்லத்திற்கு இரு வாகனங்களில் சென்று, அவ்வில்லச் சிற்றாலயத்தில், திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களுடன் சேர்ந்து அருள் நிறைந்த மரியே செபத்தைச் செபித்தனர், பின்னர் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள், எல்லாரை யும் ஆசீர்வதித்தார். இவ்வியாழனன்று கர்தினால்கள் அவையில் இணைந்த 14 புதிய கர்தினால்களுடன், திருஅவையில் மொத்தம் 226 கர்தினால்கள் உள்ளனர். இவர்களில், திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் தகுதி யுடைய 80 வயதுக்குட்பட்டவர்கள் 125. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இதுவரை 59 பேருக்கு, கர்தினால்கள் தொப்பி மற்றும் மோதிரத்தை வழங்கியுள்ளார். - வத்.வானொலி.

**பாட்னா உயர் மறைமாவட்டத்திற்கு புதிய வாரிசு ஆயர்:** இந்தியாவின் பாட்னா உயர்மறைமாவட்டத்திற்கு பக்சர் மறைமாவட்ட ஆயர் செபஸ்டியான் கல்லுப்புரா, (Sebastian Kalluppura) அவர்களை, வாரிசு ஆயராக, இவ்வெள்ளிக் கிழமையன்று நியமித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். 1953 ம் ஆண்டு ஜூலை 14ம் தேதி, கேரளாவின் கொட்டியூரில் (Kottiyoor) பிறந்த ஆயர் செபஸ்டியான் கல்லுப்புரா அவர்கள், பாட்னா உயர்மறைமாவட்டத்திற்காக, 1984ம் ஆண்டில் அருள்பணியாளராகத் திருநிலைப்படுத்தப் பட்டார். பாட்னா உயர்மறைமாவட்டத்தில் முக்கிய பொறுப்புக்களை வகித்த இவர், 2009ம் ஆண்டு ஏப்ரல் 3ம் தேதியன்று, பக்சர் மறைமாவட்ட ஆயராக நியமிக்கப் பட்டார். பாட்னா உயர்மறைமாவட்டத்தின் தற்போதைய பேராயராக, இயேசு சபையின் பேராயர் வில்லியம் டி சூசா அவர்கள், 2007ம் ஆண்டிலிருந்து பணியாற்றி வருகிறார், இவர் 1946ம் ஆண்டு மார்ச் 5ம் நாளன்று பிறந்தவர். பிஹார் மாநிலத்திலுள்ள பாட்னா உயர்மறைமாவட்டத்தின்கீழ் Bettiah, Bhaglpu, Buxar, Muzaffarpur, Purnea ஆகிய மறைமாவட்டங்கள் உள்ளன. - வத்.வானொலி.

**பராமரிப்புகள் குறைவால் 230 கோடிப் பேர் பாதிக்கப்படக்கூடும்:** உலக அளவில், பராமரிப்புகளின்றி கைவிடப்படும் சிறார் மற்றும் வயதானவர்கள் எண்ணிக்கை அதிகரித்துவரும் வேளை, இந்நிலை, 2030ம் ஆண்டுக்குள், 230 கோடிப் பேரைப் பாதிக்கக்கூடும் என்று, ஐ.நா. வல்லுனர்கள் எச்சரித்துள்ளனர். ILO எனப்படும் உலக தொழில் நிறுவனம் இவ்வியாழனன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தொழில் உலகில் சமத்துவமற்றநிலை அதிகரித்து வருவதாகவும், ஊதியமில்லாமல் வேலை செய்பவரில், 75 விழுக்காட்டிற்குமேல் பெண்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. கல்வி, நலவாழ்வு மற்றும் சமூகநலத் துறைகளுக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி, இரட்டிப் பாக்கப்பட்டால், அடுத்த 12 ஆண்டுகளில் 26 கோடியே 90 இலட்சம் வேலைகளை உருவாக்க முடியும் என்றும், ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் வீதம், 200 கோடிப் பேர் ஊதியமின்றி வேலை செய்கின்றனர் என்றும், உறுப்பு நாடுகளிடம் கூறியுள்ளது, ILO நிறுவனம். 2015ம் ஆண்டில், 210 கோடிப் பேருக்கு பராமரிப்பு தேவைப்பட்டது என்றும், இவர்களில் 190 கோடிப் பேர், 15 வயதுக்குட்பட்ட சிறார் என்றும், ஏனையோர் வயதானவர்கள் என்றும் அவ்வறிக்கை கூறுகின்றது. - UN/ வத்.வானொலி.

**ஈராக்: உலக அரசுகளின் கொடுமைகளுக்கு உள்ளாகும் கிறிஸ்தவர்கள்:** ஈராக் நாட்டில் வாழும் கிறிஸ்தவர்கள் இவ்வளவு தூரம் துன்பங்களை சந்திப்பர் என்பதை தான் கனவிலும் எண்ணிப் பார்த்ததில்லை என்று, கல்தேய வழிபாட்டு முறை முதுபெரும் தந்தையும், புதிதாக நியமனம் பெற்றுள்ள கர்தினால்களில் ஒருவருமான லூயிஸ் இர.ஃபேல் சாக்கோ அவர்கள் கூறினார். La Coix என்ற பிரெஞ்சு நாளிதழுக்கு அண்மையில் பேட்டியளித்த முதுபெரும் தந்தை சாக்கோ அவர்கள், 2014ம் ஆண்டு ஆகஸ்ட் 6ம் தேதி இரவோடிரவாக ஒரு இலட்சம் கிறிஸ்தவர்கள் தங்கள் இல்லங்களை விட்டு வெளியேற வேண்டியிருந்த துன்பத்தை குறிப்பிட்டுப் பேசினார். முதல் கிறிஸ்தவர்கள் உரோமையரின் வன்முறைகளுக்கு உள்ளானதுபோல், ஈராக் கிறிஸ்தவர்கள் பன்னாட்டு அரசுகளின் கொடுமைகளுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று முதுபெரும் தந்தை சாக்கோ அவர்கள், தன் பேட்டியில் சுட்டிக்காட்டினார். வர்த்தக இலாபத்தை மட்டுமே குறிவைக்கும் பன்னாட்டு அரசுகள், மக்களின் துயரங்களை குறைப்பதற்கு எவ்வகையிலும் முன்வருவதில்லை என்ற கருத்தையும் முதுபெரும் தந்தை சாக்கோ அவர்கள் வலியுறுத்திக் கூறினார். - வத்.வானொலி.

**அமைதி இன்றி வளர்ச்சியும், வளர்ச்சியின்றி அமைதியும் இல்லை:** உலகில் பாதுகாப்பு என்பது வளர்ச் சிக்கு இன்றியமையாதது. அந்த வளர்ச்சி வழியாகவே ஏழ்மையை எதிர்த்துப் போராட முடியும் என ஐ.நா. அவைக் கூட்டத்தில் உரையாற்றினார் ஐ.நா.விற்கான திருப்பீடப் பிரதிநிதி, பேராயர் பெர்னதித்தோ அவுசா. சிறு ஆயுதங்கள் உற்பத்திச் செய்யப்படுவது, சட்டவிரோதமாக விற்கப் படுவது போன்றவற்றைத் தடைசெய்யும் அனைத்துலக ஒப்பந்தம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது குறித்து ஆராயும் ஐ.நா. கூட்டத்தில் உரையாற்றிய பேராயர் அவுசா அவர்கள், அமைதி கலாச்சாரத்தை ஊக்குவிப்பதன் வழியாகவே, வாழ்வுக்கான மதிப்பையும் மனித மாண்பை யும் மேம்படுத்த முடியும் என்பதை வலியுறுத்தினார்.

Printed and Published on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore, by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarvaviabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.